# இறையியல் கோலங்கள்

வடிவம் : 12 மார்கழி 1999 வண்ணம் : 04



## கிறிஸ்துவில் விடுதலை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் கோலங்கள்

காலாண்டு வெளியீடு

# IRAI — IYAL KOLANGAL

Tamil Theological Quarterly

வடிவம் : 12
வண்ணம் : 04
மார்கழி : 1999

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்
இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் :

அருட்திரு ஜே. நீக்கிலஸ்

துணை ஆசிரியர்கள் :

அருட்திரு ச. வி. ப. மங்களராஜா
அருட்திரு. பி. யே. ஜெபரெட்ணம்
அருட்சகோ. செ. எ. றொஷான்
அருட்சகோ. சி. லியோ ஆம்ஸ்ரோங்
அருட்சகோ. தே. ரவிராஜ்
அருட்சகோ. செ. அன்ரன்

விநியோகம் :

அருட்சகோ. ம. பத்திநாதர்
அருட்சகோ. இ. கி. ம. அஞ்சலோ

வெளியீடு :

புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்,
இலங்கை.
( தனிப்பட்ட விநியோகத்திற்கு மட்டும் )

EDITOR :

*REV. FR. J. NICHOLAS*

SUB EDITORS :

*REV. FR. S. V. B. MANGALARAJAH*
*REV. FR. P. J. JEBARATNAM*
*BRO. S. A. ROSHAN*
*BRO. S. LEO ARMSTRONG*
*BRO T. RAVIRAJAH*
*BRO. S. ANTON*

DISTRIBUTION :

*BRO. M. PATHINATHAR*
*BRO. R. C. M. ANGELO*

PUBLICATION :

*ST. FRANCIS XAVIER'S SEMINARY*
*COLUMBUTHURAI,*
*JAFFNA,*
*SRI LANKA.*
*( For private circulation only )*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


பக்கம்

✱ உட்புகுமுன் 04

01. நற்கருணை - எம் வாழ்வின் ஊற்றும் மையமும் 06

அருட்திரு பி. யே. ஜெபரெட்ணம்

02. கிறிஸ்துவின் மனுவுரு ஏற்பும் ஏழைகளின் விடுதலையும் 11

அருட்சகோ. சி. அருட்செல்வன்

03. ஆசிய மண்ணிற்கு இயேசுவை மீண்டும் அழைப்போம் 19

அருட்திரு ஜே. நீக்கிலஸ்

04. இறைத்தூதுப் பணியாளன் கிறிஸ்து யூபிலி ஆண்டில் கிறிஸ்துவை மீளப்பார்த்தல் 25

அருட்சகோ. சில்வெஸ்ரர் அ. ம. தி.

05. 3-ம் மில்லேனியத்தில் இலங்கைத் திருச்சபையின் வாழ்வும் பணியும் கலந்தாய்வரங்கு 30

06. Synopsis 40


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உட்புகுமுன் (Editorial)

# யூபிலியின் அழைப்பு

திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் 1999 டிசம்பர் 24ஆம் நாள் வத்திக்கானில் உள்ள புனித பேதுருவானவர் ஆலயத்தில் விசேட கதவு ஒன்றினை வெள்ளிச்சுத்தியல் கொண்டு மும்முறை தட்டித்திறந்ததுடன் 2000மாம் யூபிலி ஆண்டு ஆரம்பமாகின்றது. இப்புனித யூபிலி ஆண்டு கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றும் சிகரமுமான நற்கருணையின் (2ம் வத். சங். திருச்சபை -11) ஆண்டாகத் திருத்தந்தை பிரகடனப்படுத்தியுள்ளார்.

இம்மாபெரும் யூபிலி ஆண்டின் நுழைவாயிலில் நாம் நிற்கும் போது யாழ். ஆயர் பேரருட்திரு. தோமஸ் சவுந்தரநாயகம் தமது மடல் வழியாக பரிசுத்த நற்கருணைபால் இறைமக்கள் கொள்ளும் நம்பிக்கையையும், பக்தியையும் புதுப்பிப்பதற்கான ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

இவற்றின் பின்னணியில் இச்சிறப்பிதழின் 'நற்கருணை - எம் வாழ்வின் ஊற்றும் மையமும்' என்னும் முதல் கட்டுரை, நற்கருணை ஏற்படுத்தப்பட்டமையின் பல்வேறு விவிலிய விளக்கங்களை ஆராய்ந்து நற்கருணை வழிபாடே மிக உன்னத, நிறைவான வழிபாடெனவும் வாழ்வின் எல்லா அம்சங்களுக்கும் உயிரூட்டமளிக்கும் அமுத சுரபியெனவும் சுட்டிக்காட்டுகின்றது.

'ஆசிய மண்ணிற்கு யேசுவை மீண்டும் அழைப்போம்' என்னும் கட்டுரை நமது திருத்தந்தை 1999 நவம்பர் 6ஆம் நாள் இந்தியாவில் புதுடில்லி நகரில் வெளியிட்ட 'ஆசியாவில் திருச்சபை' (Ecclesia in Asia) எனும் அப்போஸ்தலிக்க மடலில் உள்ள நற்செய்தி அறிவிப்பு, பண்பாட்டு மயமாக்கல் பற்றிய கருத்துக்களைப் பிரதிபலித்து ஆசியாவில் இவற்றின் வரலாற்றுப் பின்னணி மற்றும் மறைவல்லுனர்களின் கருத்துக்கள், திருச்சபையின் ஆசிரியம் அவ்வப்போது வெளியிட்டு வந்த வழிகாட்டுதல்கள் ஆகியவற்றை ஆராய்ந்து விளக்குகின்றன. நமது மண்ணில் இன்று நற்செய்தி அறிவிப்பு பலன்தர வேண்டுமாயின் பண்பாட்டு மயமாக்கல் முழு வேகத்துடன் முன்னெடுத்துச் செல்லப்படவேண்டுமென்பது தெளிவாக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசுவின் மனுவுருவாதலும் அவரது மீட்புப்பணியும் உலகில் முழுமை பெறவேண்டுமாயின் சமுதாயத்தில் காணப்படும் சுரண்டல்கள், அடக்குமுறைகள் போன்றவற்றை நாம் அகற்றவேண்டும். யேசுவைப்போல் ஏழை எளியவர்கள் பக்கம் நிற்கவேண்டும் என்ற உண்மை விவிலிய மேற்கோள்களுடன் 'கிறிஸ்துவின் மனுவுரு ஏற்பும் ஏழைகளின் விடுதலையும்' எனும் கட்டுரையில் விளக்கப்படுகின்றது. மேலும் யாழ் மண்ணில் நடைபெறும் சமகால நிகழ்வுகள் சவால்களாக அமைந்துள்ளமை சுட்டிக்காட்டப்படுகின்றன.

கிறிஸ்துவின் இவ்வுலக வாழ்வுப்பணி ஏழை, எளியவர்கள் ஒதுக்கப்பட்டவர்கள், நோயாளிகள் போன்றோரைச் சென்றடைந்து அவர்களது வாழ்க்கையில் வசந்தத்தைக் கொணர்ந்தது போல புலரும் யூபிலி ஆண்டிலும் நமது பணி ஒரு புதிய சமுதாயத்தை-இறையாட்சியை மலரச்செய்ய வேண்டுமென்பதை 'இறைத்தூதுப் பணியாளன் கிறிஸ்து - யூபிலி ஆண்டில் கிறிஸ்துவை மீளப்பார்த்தல் எனும் கட்டுரை விளக்குகின்றது.

இவ்விதழின் சிறப்பம்சமாக '3 ஆம் மில்லேனியத்தில் இலங்கைத் திருச்சபையின் வாழ்வும் பணியும்' என்ற தலைப்புடன் அறிமுகமான கலந்துரையாடல் ஆகும். ஆரம்பத்திலேயே யாழ். திருச்சபையை மையமாகக் கொண்டு கருத்துக்களைப் பரிமாறுவது பலன் தரமென்று சுட்டிக்காட்டப்பட்டது. திருச்சபையின் பல்வேறு நிலைகளில் வேறுபட்ட அனுபவங்களைக் கொண்டவர்கள், ஒரு இளம் குரு, ஒரு குரு மாணவன், ஒரு அனுபவமிக்க பெண் துறவி, இரு இளம் ஆசிரியர்கள் (ஒரு ஆண், ஒரு பெண்), ஒரு வெள்ளிவிழாக் கண்ட மறையாசிரியர் ஆகியோர் கலந்து கொண்டனர். கலந்துரையாடலில் பொதுநிலையினரின் உரிமைகளும் பங்களிப்பும் ஆணித்தரமாக உணர்த்தப்பட்டன. திருநிலையினரின் சாட்சிய வாழ்வின் தேவை வலியுறுத்தப்பட்டது. பொதுநிலையினரை இறையியல் அறிவில் வளரத்தூண்டுதல் ஒரு கட்டாய தேவையென்று வலியுறுத்தப்பட்டது. திருநிலையினர் பொதுநிலையினரின் கூட்டுப்பணி, இவர்களிடையே வேறுபாடுகள் அல்லது ஏற்றத்தாழ்வுகளை வளர்க்காது ஒரு சுமூகமான கூட்டுமுயற்சியிலும், செயற்பாட்டிலும் வெளிப்பட வேண்டுமென உணர்த்தப்பட்டது.

வாசித்து சிந்திக்கத்தூண்டுகின்றவற்றை ஆழ்ந்து சிந்தித்து செயல் வடிவம் கொடுக்க வேண்டியவற்றிற்கு செயல் வடிவம் கொடுங்கள்.

கிறிஸ்து பிறப்புக்கும் புத்தாயிரமாம் ஆண்டுக்கும் வாழ்த்துக்கள் கூறி நிற்கின்றோம்.


அருட்திரு. S. V. B. மங்களராஜா.
இணை ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்கருணை - எம் வாழ்வின் ஊற்றும் மையமும்.

அருட் திரு. பி. யே. ஜெபரெட்ணம்



ஒரு கிறீஸ்தவனின் வாழ்வில்நற்கருணை ஏனைய அருட்சாதனங்களை யெல்லாம் நிறைவுபடுத்தும் அல்லது முழுமைப்படுத்தும் அருட்சாதனமாகும். கிறீஸ்துவினால் கடைசி இராப் போசனத்தின்போது ஏற்படுத்தப்பட்ட இந்த அருட்சாதனம் இன்றுவரை அதன் மகிமை குன்றாமல் விளங்குவது நற்கருணையில் கிறீஸ்துவின் முழுமையான உண்மையான பிரசன்னத்திற்கு ஒரு சான்றாகும். "இதோ நான் உலகம் முடியும்வரை எந்நாளும் உங்களோடு இருக்கிறேன்'' (மத். 28 : 20) என்ற கிறீஸ்துவின் வார்த்தைகள் நற்கருணை என்னும் அருட்சாதனத்தால் என்றும் உண்மையாகிக் கொண்டிருக்கின்றன. இந்த உண்மையில், அதாவது, ஒரு கிறிஸ்தவனின் வழிபாட்டுவாழ்வின் உச்சமாகிய திருப்பலியும் அதன் மையமாகிய நற்கருணையும் தான் அவனது விசுவாச வாழ்வின் ஆணிவேராகும் என்ற உண்மையில், ஒவ்வொரு கிறீஸ்தவனும் ஒன்றித்திருக்கவேண்டும் என்று திருச்சபை விரும்புகிறது. இதனால்தான் பிறக்க இருக்கும் 2000ம் யூபிலி ஆண்டை நற்கருணை ஆண்டாக பரிசுத்த பாப்பரசர் 2ம் அருளப்பர் சின்னப்பர் பிரகடனப்படுத்தியிருக்கின்றார். எனவே நற்கருணை ஆண்டில் காலடிவைக்க இருக்கின்ற நாம் இறைவனின் இம்மாபெரும் கொடையை ஆழமாக தியானித்து உள்வாங்குவது அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. புதிய ஏற்பாட்டில் நற்கருணையை ஏற்படுத்துதல்:

### 1. 1 புனித பவுல்

கி. பி. 55ம் ஆண்டு அப்போஸ்தலரான புனித. பவுல் தன்னால் நிறுவப்பட்ட கொரிந்து நகர திருச்சபையைச் சேர்ந்த மக்களுக்கு கடிதம் எழுதினார். இம்மக்களிடையே செல்வந்தர், வறியோர் என்னும் வர்க்க வேறுபாடு மேலோங்கவே, அவர்களால் தங்களுக்கிடையே யிருந்த இச்சமத்துவமில்லாத தன்மைகளை தடுக்கமுடியாமல் இருந்தது. எனவே அவர்கள் கூடும்போது பல விரும்பத்தகாத செயல்பாடுகள் தலைதூக்கின. இதனால் புனித பவுலின் கடிதம் இவ்வாறு பேசுகிறது.

"...நீங்கள் ஒன்று கூடும்போது உங்களுக்கு நன்மையைவிட தீமையே விளைகிறது. முதலாவதாக நீங்கள் சபையில் கூடும்போது உங்கள் நடுவில் பிளவுகள் இருப்பதாக கேள்விப்படுகிறேன். நீங்கள் ஒன்றாக கூடி உண்பது ஆண்டவரின் விருந்தன்று, உங்கள் சொந்த விருந்தே. ஏனெனில், நீங்கள் உண்ணும்போது, ஒவ்வொருவனும் உண்பதற்கு முந்திக்கொள்வதால் ஒருவன் பசியாய் இருக்கிறான், வேறொருவன் குடிவெறி கொள்கிறான். உண்டு குடிக்க உங்களுக்கு வீடு இல்லையா? அல்லது இல்லாதவர்களை நாணச்செய்து, கடவுளின் சபையை இழிவுபடுத்த நினைக்கிறீர்களா? என்ன சொல்வது உங்களைப் புகழ்வதா? இதில் உங்களை எப்படிப் புகழ்வது?

ஏனெனில் நான் ஆண்டவரிடமிருந்து பெற்றுக்கொண்டது இதுவே. அதையே நான் உங்களுக்கு கையளித்தேன் அதாவது, "ஆண்டவராகிய யேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அந்த இரவில் அப்பத்தை எடுத்து ..." (1கொரி 11:20-23, 23-26)

இந்த இடத்தில்தான் நற்கருணை ஏற்படுத்தல் பற்றிய மிக முதலாவதான விளக்கத்தை புதிய ஏற்பாட்டில் நாம் காண்கிறோம்.

> நற்கருணை வழிபாடுதான் வழிபாடுகளுக்கெல்லாம் உச்சமும் மையமுமாக விளங்குகின்றது

இந்த நற்கருணை ஒன்றுகூடல் சடங்குகளில் ஆரம்ப காலத்திலேயே ஏற்பட்ட தடைகளை நீக்குவதில் புனித பவுல் முனைப்பாக இருப்பதை காணக்கிடக்கிறது. இதன் பொழுது நற்கருணை அருட்சாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னம் ஆண்டவராகிய யேசுகிறீஸ்துவிடமிருந்து பெறப்பட்டது. என்பதை அதாவது அதன் அடிப்படையான மூலத்தை புனித பவுல் "நான் ஆண்டவரிடமிருந்து பெற்றுக்கொண்டது இதுவே" என்ற வார்த்தைகளால் இடித்துரைக்கின்றார்.

## 1.2 ஒத்தமை நற்செய்தியாளர்கள்

ஒத்தமை நற்செய்திகளான புனித மத்தேயு, புனித மாற்கு, புனித லூக்கா ஆகியோருடைய நற்செய்திகளில் நற்கருணை ஏற்படுத்துதல் பற்றிய பகுதிகளை காணக்கூடியதாக இருந்தாலும் அவை புனித பவுல் எழுதியதன் பின்னர் சுமார் 15 தொடக்கம் 20 ஆண்டுக்ளுக்கு பின்னரே எழுதப்பட்டவையாகும். இதனால் ஏற்கனவே கிறீஸ்தவ திருச்சபைகளில் நற்கருணை ஒன்றுகூடல்களில் பயன்படுத்தப்பட்ட வார்த்தைகள், சொற்றொடர்களை இந் நற்செய்திகள் கூறி நிற்கின்றன என்று சொல்லலாம்.

(லூக். 22 : 14, 20; மாற். 14: 20 - 25; மத், 26: 26 - 29) இவற்றுள் நற்கருணை ஏற்படுத்துதல் பற்றி புனித லூக்கா கூறுவது புனித பவுல் கூறுவதற்கு மிகவும் ஒத்ததாக இருப்பதைக் காணமுடிகிறது. ஆனால் மத்தேயு, மாற்கு ஆகியோருடைய பகுதிகள் வேறு மூலங்களிலிருந்து பெறப்படுவதாக காண்கிறோம்.

இவ்வாறு மூலங்களிலே வேறுபாடுகளிருந்தாலும் எல்லா பகுதிகளிலும் ஒரே கட்டமைப்பு இழையோடுவதை அவதானிக்க முடியும்.

1. இயேசு அப்பத்தை எடுத்தல், பின் திராட்சை இரசம் நிறைந்த கிண்ணத்தை எடுத்தல்.
2. நன்றி கூறுதல் அல்லது வாழ்த்துரைத்தல்
3. அப்பத்தை பிட்டல்
4. அப்பத்தையும் இரசத்தையும் சீடர்களுக்கு கொடுத்தல்.

## 1.3 திருப்பலியில் நற்கருணை ஏற்படுத்தலின் நிகழ்வுகள்

மேற்குறிப்பிட்ட நான்கு தொடர் அம்சங்களும் திருப்பலியின் இரண்டாம் பகுதியாகிய நற்கருணை வழிபாட்டில் மிக முக்கியமான சடங்குகளாகும்.

1. காணிக்கைப் பொருட்களை அளித்தல். இதன்போது காணிக்கைகள் எடுத்துச் செல்லப்பட்டு திருப்பீடத்தில் வைக்கப்படும்.
2. நற்கருணை மன்றாட்டு. இதில் நற்கருணை ஏற்படுத்தலில் யேசு கூறிய வார்த்தைகளும் அடங்கும்.
3. வசீகரம் செய்யப்பட்ட அப்பங்கள் பிட்கப்படல்.
4. நற்கருணைப் பந்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பலிக் கொண்டாட்டத்தில் மேற்கூறப்பட்ட சடங்குகள் அனைத்தும் ஒன்றுசேர்ந்து நற்கருணை வழிபாடு என்று அழைக்கப் படுகின்றது. இந்த நற்கருணை வழிபாடுதான் வழிபாடுகளுக்கெல்லாம் உச்சமும் மையமுமாக கருதப்படுவதற்கு காரணம் 'நான் ஆண்டவரிடமிருந்து பெற்றுக்கொண்டது இதுவே'' என்று புனித பவுலோடு சேர்ந்து விசுவாசிகளாகிய நாம் ஒவ்வொருவரும் அறிக்கையிடுவதேயாகும் என்றால் அதுமிகையாகாது. இதனால் நற்கருணையில் நாம் உண்பது ஆண்டவரின் உணவு என்பதால் இதைவிட மேலான ஒரு வழிபாட்டு நிகழ்வையோ சடங்கையோ நாம் மேற்கொள்ள முடியாது என்பது தெளிவு.

## 2. ஆண்டவரின் உணவு

நற்கருணை ஆண்டவரின் உணவு என்று அழைக்கப்படுகின்றபோது பின்வரும் அம்சங்களை வலியுறுத்தி நிற்கின்றது.

1. நற்கருணையின் உணவுத்தன்மை (Meal aspect)
2. கிறீஸ்துவுக்கும் நற்கருணையை அருந்துவோருக்கும் இடையே ஏற்படுத்தப்படும் உறவு.
3. நற்கருணையை அருந்துவோருக்கிடையே ஏற்படுத்தப்படும் உறவு.

இதனால் நற்கருணையை அருந்துவோர் அனைவரும் ஒருவரோடு ஒருவர் அன்புறவில் இணைந்து, கிறிஸ்துவுக்குள் எல்லோரையும் ஒன்றிணைத்து ஒரு கிறிஸ்தவ குடும்பமாக உருமாறும்போதுதான் ஆண்டவரின் உணவு அர்த்தம் பெறுகிறது. இதனை செயல்படுத்தும் அருளும் சக்தியும் இத்திருவுணவினால் இதை அருந்துவோருக்கு அளிக்கப்படுகிறது.

### 2.1 நற்கருணை வெறும் சடங்கோ மந்திரவித்தையோ அல்ல.

நற்கருணை ஒரு மந்திரவித்தை அல்ல. திருப்பலியில் வசீகர வார்த்தைகள் (Words of consecration) சொல்லப்படுகின்றபோது

> ஒரு கிறீஸ்தவனின் வழிபாட்டு வாழ்வின் உச்சமாகிய திருப்பலியும் அதன் மையமாகிய நற்கருணையையும் தான் அவனது விசுவாச வாழ்வின் ஆணிவேராகும்

அப்பமும் இரசமும் கிறீஸ்துவின் உடலாகவும் இரத்தமாகவும் மாறுகின்றதென்றால் இது ஒரு மந்திரவித்தைபோன்ற ஒரு மாற்றமல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றம். விசுவாசத்தின் சமூகமாகிய திருச்சபையின் வேண்டுதலால் தூய ஆவியின் பிரசன்னத்தால், ஆற்றலால் நிகழும் ஒரு (தன்மை) மாற்றமாகும். தூய ஆவியின் தலையீடு இங்கு இல்லை என்னும் போதுதான் அது வெறும் சடங்காக மாறிவிடுகின்றது. ஆனால் கிறீஸ்தவ சமூகத்திலே பிரசன்னமாக இருக்கின்ற தூய ஆவியின் செயல்பாட்டினால்தான் இந்த (தன்மை) மாற்றம் இடம் பெற நாம் கிறீஸ்துவின் உடலையும் இரத்தத்தையும் பெற்றுக்கொள்கிறோம்.

## 3. முடிவுரை

"அவர் கையளிக்கப்பட்ட இரவில் அப்பத்தை எடுத்து..." என்று ஆரம்பித்து நற்கருணை ஏற்படுத்துதல் பற்றி புனித பவுல் கொரிந்து மக்களுக்கு கூறிய நற்கருணைக்கதை கடந்த 2000 ஆண்டுகளாக இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கும் உண்மைக் கதையாகும். "இதை என் நினைவாகச் செய்யுங்கள்" (லூக் 22 : 19; 1 கொரி 11 : 24, 25) என்ற கிறீஸ்துவின் அன்புக்கட்டளைக்கு திருச்சபையின் கீழ்ப்படிதலான பதிலே இதற்குக் காரணமாகும். ஆனால் இந்த நற்கருணைக் கதை வழிபாட்டோடு நின்றுவிடாமல் மக்கள் ஒருவர் ஒருவருக்காக தங்களையே உடைத்து கிறீஸ்துவின் பகிர்தலில் தியாக உணர்வோடு பங்குகொள்ளும்போதுதான் நற்கருணை முழுமையடைகிறது. அர்த்தம் பெறுகிறது. அப்போதுதான் "அவர் வருமளவும் அவருடைய மரணத்தை அறிக்கையிடுகிறோம்" (1கொரி. 11 ; 26) என்று பறைசாற்றமுடியும்.

> "இறைவன் உன் வாழ்வில் எல்லாமாகிறார். பசியாயிருந்தால் உணவாகிறார், தாகமாயிருந்தால் பானமாகிறார், இருளாயிருந்தால் ஒளியாகிறார், ஆடையற்றிருந்தால் நித்திய ஆடையாகிறார்?".
>
> — புனித அகுஸ்தினார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்துவின் மனவுரு ஏற்பும் ஏழைகளின் விடுதலையும்

அருட்சகோ. சி. அருட்செல்வன்
4-ம் வருட இறையியல்



நெடுமூச்சே 'விதி' என்றாகிவிட்ட நிலையில் வாழ்க்கையில் மறுபடி மறுபடி திசையற்றுப்போகின்ற ஏழைகளுக்குரிய வாழும் உரிமை, பிச்சைப் பாத்திரங்களில் நாம் போடும் சில்லறைகள் அல்லவே. அது ஆத்மார்த்தமான மனித நேய ஈடுபாட்டோடும், உண்மையான அர்ப்பணிப்பு நிறைந்த அணுகுமுறையோடும் அவர்களின் 'விடிவுக்காக' வாழ்வதே ஆகும். உலகின் போர்முனைகளும், முதலாளித்துவப் பணமுதலைகளும், சுயநலவாதிகளின் 'சுருட்டுதல்களும்' ஏற்படுத்தியிருக்கும் முகமற்ற ஏழை மனிதர்கள் எம் வீதிகளில் ஆயிரமாயிரம். அவ்வகையில் அடையாளமற்ற இம் மனிதர்களின் ஒவ்வோர் அங்கலாய்ப்புக்கும் பொறுப்பேற்க வேண்டியவர்கள் யாருமல்லர், இந்தச் சமுதாயத்தினரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய ஏற்பாட்டுப் பக்கங்களைப் புரட்டுகின்ற போதும், வாழ்க்கையை மகிழ்வாக வாழ நாதியற்ற ஏழை மனிதர்களைச் சந்திக்கின்றோம். அங்கே அவர்களைச் சுரண்டி, அடக்கி ஒடுக்குகின்ற செல்வந்தர், அரசர்களுக்கு இறைவனே தம் இறைவாக்கினர் ஊடாகச் சம்மட்டியடி கொடுத்து அவர்களைக் காப்பாற்றுகின்றார். பின்னர் புதிய ஏற்ப்பாட்டில் யூத சமுதாயத்தின் ஏழைகள் மீதான அடக்கு முறைகளில் இருந்து அவர்களை விடுவிக்க இயேசு சரித்திரத்தில் நுழைகிறார். இவ்வாறு அவரின் 'மனிதவுருத் தாங்கல்' (Incarnation) முழு மனுக்குலத்துக்கும் தேவைப்பட்டது. அதே கிறிஸ்துவின் மறையுடலான இறைமக்கள் சமூகம் இந்த ஏழைகள் மட்டில் கொள்ளவேண்டிய உளப்பாங்கும் அணுகுமுறையும் என்ன என்பது பற்றி இங்கே சிந்திப்போம்.

## ஏழைகளுக்கு இஸ்ராயேலில் இடம்

இஸ்ராயேலின் கண்ணோட்டத்தில் ஏழைகள் இறைவனின் சாபக்கேட்டுக்கும், கோபாவேசத்துக்கும் ஆளான துர்ப் பாக்கியசாலிகள் என்ற கருத்தே மேலோங்கி நிற்பதை நாம் காணலாம். அதன் காரணமாக இந்த நலிந்தவர்களைத் தம் சமுதாயக் கட்டமைப்புக்கு வெளியே தள்ளி மிதிக்கும் ஒரு கடினமான அணுகுமுறையை ஏழைகள் மட்டில் கடைப்பிடித்து வந்தார்கள். இந்த நிலையிலேதான் இறைவாக்கினர்கள் ஏழைகளுக்காகத் தம் நிலைகளை எடுத்துக்கொண்டு, வாதாடி அவர்களின் உரிமைகளை வென்றெடுப்பதை அடுத்த பகுதியில் காணமுயல்வோம்.

> ஏழை விவசாயிகளின் விளை நிலங்களை அபகரித்துக் கொண்ட போதும் கைம் பெண்களின், அடக்கப்பட்டோரின், தேவையில் உழன்றோரின் உரிமைகளைப் பறித்தெடுத்தவர்களை இறைவாக்கினர்களின் குரல்கள் சாட்டையடி கொடுக்க தவறவில்லை

## இறைவாக்கின் பக்கங்களில் ஏழைகள்

இறைவாக்கினர்களின் ஏழைகள் சார்பான குரலொலி எந்த ஒரு சூழலில் ஒலித்தது என்று சொன்னால், அது, நிலச்சொந்தக் காரரும், ஆட்சிப்பீடம் அமர்ந்த அரசர்களும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண முதலைகளும் ஏழை எளியவர்களைச் சுரண்டி, அவர்களின் சொத்துச் சுகங்களை ஏப்பம் விட்டுக்கொண்டிருந்த போதே என்று சொல்லலாம். ஏழை விவசாயிகளின் விளை நிலங்களை அபகரித்துக் கொண்டபோதும், கைம்பெண்களின், அடக்கப்பட்டோரின், தேவையில் உழன்றோரின் உரிமைகளைப் பறித்தெடுத்தபோதும் இறைவாக்கினர்களின் குரல்கள் சாட்டையடி கொடுக்கத் தவறவில்லை. இஸ்ராயேலில் மனிதம் கடைச்சரக்காக விற்கப்பட்டபோது, ''நீதி தண்ணீரைப்போல் வழிந்தோடட்டும். நேர்மை நீரோடைபோற் பாயட்டும்'' (ஆமோ 5:24) என்ற இறை மனிதன் ஆமோசின் இடித்துரைப்பு அடிமைத்தனத்திற்குத் துணைபோன வலுவான கட்டமைப்புகளையே அதிரவைத்தது. வறுமை வர்க்கத்தின் தோற்றம் இறை தண்டனையோ, சாபக்கேடோ அல்ல. மாறாக இது செல்வந்தர் தாம் வாழ ஏற்படுத்திக்கொண்ட வர்க்கமே என இறைவாக்கினர் உறுதியாக நம்பினர்.

சடங்கு சம்பிரதாயங்களுக்குள் தம்மை இனங்கண்டு கொண்டு ஏழைகளைச் சாகடிக்கும் மக்கட் கூட்டத்தைப் பார்த்து எசாயா, 'உங்கள் சாம்பிராணிப் புகைகள் எமக்கு அருவருப்பைத் தருகின்றது. உங்கள் காணிக்கையை நாம் வெறுக்கின்றோம், ஏனெனில் நீங்கள் ஏழைகள் மட்டிற் பாகுபாடு காட்டுகிறீர்கள்' (எசா 1:11-15) என்று கடிந்து கொள்வது எம் காதுகளில் ஒலிக்கிறது. இவ்வாறு பழைய ஏற்பாட்டில் ஏழைகள் துன்புறுத்தப்படுவதையும் அவர்களைப் பாதுகாத்து உரிமைக்குரல் கொடுக்க இறைவாக்கினர் செயற்படுவதையும் பார்த்தோம். இனி, புதிய ஏற்பாட்டின் புது யுகத்தில் ஏழ்மை எவ்வாறு அணுகப்பட்டது என்பதை ஆராய்வோம்.

## புதிய ஏற்பாட்டில் புத்துயிர் பெறும் ஏழைகள்

### அ. யூதத்தின் காலடியில்

இஸ்ராயேல் இனத்தின் ஏழைகள் பற்றிய கொள்கையை அப்படியே விழுங்கிய யூத மரபினர், குறிப்பாக பரிசேயர், சதுசேயர், மறைநூல் அறிஞர் தமது மூதாதையரின் வழிமரபைப் பின்பற்றி ஏழைகளை ஏளனத்தோடு நோக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னர். சபிக்கப்பட்டவர் எனக் கருதினர். பாவிகள் எனப் பகைத்தனர். பிறவியிலேயே குருடனாக இருந்தவனைக் கொண்டு சென்று, "ராபி இவன் செய்த பாவமா? இவன் பெற்றோர் செய்த பாவமா? இவன்இப்படி இருக்கக் காரணம்? (அரு 5: 1—2) எனக்கேட்டதும், பாவிப் பெண்ணைக் கல்லால் எறிந்து கொல்ல முனைந்ததும் (அரு 8:1f), சூம்பிய கையனைக் குணமாக்குவாரா பார்ப்போம் எனக் கண்ணி விரித்துக் காத்திருந்ததையும் (லூக் 6:11) பார்க்கும் போது, அவர்கள் ஏழைகள்பாற் கொண்டிருந்த மனநிலை தெரியும். அவர்கள் எதற்கு முக்கியத்துவம் கொடுத்தனர், மனிதத்திற்கா? தனியே சட்டத்திற்கா? என்பது புரியும். எந்த அளவிற்கு யூதம் நலிந்தவர்களைக் கீழ்த்தரமாகக் கருதியது என்றால் "ஆண்டவரே நான் மற்ற மனிதரைப் போலவோ, இந்த ஆயக்காரனைப் போலவோ இராதது பற்றி நன்றி செலுத்துகின்றேன்" (லூக் 18:4). என்று இறைவனிடமே செபிக்கும் அளவிற்கு இதயம் மரத்துப்போனது. ஏழைகளின் துன்பக் கல்லறைகளைக் கண்டும் காணாமலும் தமது செல்வச் செழிப்பின் உச்சியிலே வாழ்க்கை நகர்த்தும் இந்த மக்களைச் சாடி, அவர்களுக்கான எரிநரகத் தண்டனையை அறிவிப்பதைப் 'பணக்காரனும் ஏழை லாசரும்' என்ற உவமை (லூக் 16:19f) மூலம் அறிகின்றோம். இவ்வாறு இயேசு உவமைகள், போதனைகள் மூலம் தாம் ஏழைகளைத் தேடி மீட்கவே வந்தேன் என வெளிப்படையாகவே சொல்லியிருக்கிறார்.

### ஆ. கிறிஸ்துவின் ஆத்மார்த்த நண்பர்கள்

எப்பொழுதும் இயேசுவைச் சுற்றி ஒரு கூட்டம் இருந்தது என்றால் அது மெல்லிய ஆடை அணிந்த மனிதரோ, சமூக அந்தஸ்தின் பல்லக்கு ஏறிய செல்வரோ அல்லர்.

> "ஏழையருக்கு நற்செய்தி என்னும்போது, ஏழையற்றோருக்கு அது தீய செய்தியாகும். ஏழையற்றோர் அந்தச் சவாலை ஏற்று, மனந்திரும்பும் போதுதான், அது அவர்களுக்கும் நற்செய்தியாகிறது."
>
> - எவின்லி

மாறாக அவரைச்சூழ, தேடிச் சென்றவர்கள் உடல், உள, நோயாளிகளும், 'பாவிகள்' என்று சமூகத்தால் முத்திரை குத்தி ஒதுக்கப்பட்டவர்களும், பல்வேறு தேவைகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்டுக் கையேந்திச் சென்றவர்களுமே ஆவர். இயேசுவும் தமது மனுவுரு ஏற்பின் அர்த்த பரிமாணத்தை அந்தச் சிறியவர்களோடும், பலவீனமானவர்களோடும் பகிர்ந்து கொள்ளும் போதெல்லாம், யூதர்களிடம் இருந்து சவால்கள் சரமாரியாக வந்து குவிந்தன. சாக்கடை மனிதரோடு என்ன சகவாசம்? என்றனர். சாம்பல் மேட்டு ஏழைகளுக்கும் பாவிகளுக்கும் நண்பன் என்றனர். ஆனால், இயேசுவின் வழியோ 'தனி..... வழியாக' அமைந்தது. ஏழைகள் வீடு அவருக்குத் தங்குமிடம் ஆயிற்று, பாவிகளின் தோழமையில் பரமதிருப்தி அவருக்கு.

இயேசுவின், ஏழைகள், ஒடுக்கப்பட்டோர் மீதான புதிய பார்வையையும், பணியையும் பற்றி லூக்காஸ் குறிப்பிடும் போது "ஆண்டவரின் ஆவி என்மேலே ஏனெனில் அவர் என்னை அபிஷேகம் செய்துள்ளார். எளியோருக்கு நற்செய்தி சொல்லவும் சிறைப்பட்டோர் விடுதலை அடைவர் என அறிவிக்கவும் ஆண்டவர் என்னை அனுப்பினார்" (லூக் 4:14-28) என்று கூறும் இந்தப் புரட்சிப்பணி, ஏழைகளுக்குப் புதிய அங்கீகாரத்தையும், சுதந்திரக் காற்றுக்கான சாளரங்களையும் அகலத்திறந்துள்ளது என்பது உண்மை. யேசுவைப் பொறுத்தவரையில், அது ஆன்மீக வறுமை என்றால் என்ன, பொருளாதார வறுமை என்றால் என்ன ஒருவன் அதனால் துன்பம் அனுபவித்தால் அவன் மீட்கப்படவேண்டும். அதற்காக இயேசு கையாண்ட ஒரே வழி "மனவுருத்தாங்கல்" (Incarnation).

## இறைமக்கள் - கிறிஸ்துவின் மறையுடல்

கிறிஸ்து தனது இரத்தத்தினால் விலைகொடுத்து வாங்கப்பெற்ற இறைமக்கள் கூட்டம் உடன்படிக்கையின் மக்கள் ஆதலால், அவர்கள் கிறிஸ்துவின் மறையுடலாகவும் விளங்குகின்றார்கள். இந்தவகையில் மறையுடலாம் திருச்சபை கிறிஸ்துவின் ஏழைகளுக்கான விடுதலைப் பணியைத் தொடர்ந்து ஆற்றித் துன்புறும் ஆயிரமாயிரம் ஏழை மக்களின் நல்வாழ்வுக்கான வாசல்களை அகலத் திறந்துவிட அழைக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறீஸ்து இட்ட அடித்தளத்தில் புதிதாய் மொட்டவிழ்ந்த ஆதித்திருச்சபை இந்தச் சவால்கள் நிறைந்த அழைப்புக்குச் சாட்சியம் பகர்வதை நாம் அறிவோம். அதே தலை

> ''செல்வத்தின் ஆதிக்கத்திற்குச் சவுக்கடிதரும் இயேசுவைத்தான் நற்செய்தியில் காண்கின்றோம். புரட்சியாளராக இருந்த இயேசுவை வரலாற்றுப் பாரம்பரியத்தில் ''பிளாஸ்டிக்'' இயேசுவாக மாற்றிவிட்டோம்.''
>
> - அறிஞர் ராபின்சன்

மையை, அதே பணியாற்றலைக்கொண்ட எமது யாழ் திருச்சபை, தற்கால சூழலில் ஆற்றவேண்டிய பணி என்ன? அதற்கான சவால்கள் என்ன? என்பதைச் சற்றுப் பார்ப்போம்.

## யாழ் இறைமக்கள் சமூகத்திற்கான சவாலும் அழைப்பும்

### சவால்

இறைமக்கள் ஆன்மாவும், உடலும் கொண்டவர்கள் என்பதால், அவர்களின் உடலையும், வாழ்வையும் பாதிக்கின்ற எந்தவொரு காரணியும் நிச்சயமாக அவர்களின் ஆன்மீக வாழ்வையும், மொத்தத்தில் திருச்சபையின் ஆன்மாவையுமே பாதிக்கின்ற துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படும் என்பதில் ஐயமில்லை.

முற்றுகையிடப்பட்ட இரவுகளுக்குள்ளும், விலங்கிடப்பட்ட கரங்களுக்குள்ளும், யாழ் குடாநாடு தன் தேசீயத்தை இன்று இழந்திருந்தாலும்,ஒரு சாராரின் இருப்பு எந்த விதத்திலும் சலனப்படாதஒரு நிலை ஒருபுறமிருக்க பெரும்பகுதி மக்களின் வாழ்க்கைப் பின்புலம் சோகவாட்கள் நிறைந்த ஒன்றாகக் காணப்படுவதை நாம் உணரலாம். கடந்த பதினாறு வருடகாலப் போர் ஏற்படுத்தியிருக்கும் எண்ணிலடங்கா சொத்தழிவுகளும், ஆயிரமாயிரம் கைம்பெண்களும், விலையேற்றம் பெற்ற அத்தியாவசியப் பொருட்களும், கடற்கரையோரங்களில் காய்ந்து வெடிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் பிளாஸ்ரிக் படகுகளும், யாழ் குடாநாட்டு மக்களின் வாழ்வைக் கேள்விக்குறியாக்கி, அதன் இயல்பான வாழ் வியலுக்குச் சவால் விட்டுள்ளதை நாம் நன்கறிவோம்.

ஏறத்தாள 70% மக்கள் தமது அன்றாட சீவனோ பாயத்துக்காகத் துடியாய்த் துடிப்பதும், போதிய போஷாக் கற்ற உணவுகளை உட்கொண்டு, குறிப்பாகச் சிறுவர்கள், பாலூட்டும் தாய்மார் நோய்வாய்ப்பட்டு மரணிப்பதும், கொலைகள், தற்கொலைகள் செய்து கொள்வதும் எம் மண்ணில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும், எவர் நெஞ்சை யும் நெகிழவைக்கும் சோக நிகழ்வுகளாகும். இந்த நிலை யைக் கண்டும் காணாமலும் இறைமக்கள் சமூகம் தனது சடங்குகளுக்குள் மட்டும் மறைந்திருக்குமானால், அதன் பயணம் திசைமாறிய பயணமாகிவிடும் என்பது உண்மை. எனவே இயேசுவின் மனுவேற்பின் உண்மைக்குச் சாட்சி யான இறைமக்கள் சமூகம், தன்னை ஏழைகளோடு அடை யாளம் கண்டு, அவர்களின் முன்னேற்றத்துக்காக உழைப் பது இன்றைய காலத்தின் தேவையாகவும், கடவுளின் திட் டமாகவும் இருக்கின்றது.

## அழைப்பு

அன்பினாலும், புனிதத்தினாலும் கட்டியெழுப்பப் பட்டு உலகுக்குப் புளிக்காரமாக இருக்கும்படி அழைப்புப் பெற்ற இறைமக்கள் சமூகமே தடம்புரண்டுபோய் நிற்கும் நிலையில், ஒருவரைபொருவர் தேற்றவும் ஒருவருக்கொரு வர் பகிர்வு செய்யவும் ஒருவருக்காக ஒருவர் வாழவும் அழைப்புப் பெற்றுள்ளோம். என்னையும் எனது குடும்பத் தையும், சுற்றி நாம் எழுப்பிய சுயநலத்தின் சுவர்களால் மறைக்கப்பட்ட மற்றவருடைய வெறுமையையும், அதற் கான வேர்களையும் நாம் கண்டு கொள்ள அதை அகற்ற முயற்சி செய்ய அழைப்புப் பெற்றுள்ளோம். தன்னலத்துக் காக மற்றவர்களை ஏமாற்றி, வஞ்சித்து, கொள்ளைய டித்து, எங்கள் வயிற்றை நிரப்பும் துரோகத்திலிருந்து ஒரு வாழ்வு மாற்றத்துக்காக அழைக்கப்பட்டுள்ளோம். இந்த அழைப்பு வேறு எங்கிருந்துமல்ல. எம் ஆண்டவர் இயேசு வின் மனுவுருத்தாங்கலில் இருந்து நாம் பெறும் அழைப்பு. இயேசுவுக்காக மனிதத்தை நேசிக்கும் ஓர் புனித அழைப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவாக

இன்று உலகின் எத்திசையை நோக்கினாலும் 'வீட்டிற்கு வீடு வாசற்படி' என்பது போல மனித வாழ்வில் வறுமையின் கோடுகள் ஆழமாக வேரூன்றி இருப்பதை சரியான சமூகப்பார்வையுள்ள ஒவ்வொரு மனிதனாலும் புரிந்து கொள்ள முடியும். இவர்களின் நீண்ட பெருமூச்சுகளுக்கும், உறக்கமில்லாத இரவுகளுக்கும், எமது சுயநலமான மனித நேயமற்ற சுரண்டல், சுருட்டுதல்கள், அபகரிப்புக்கள், அதீத ஆசைகள் காரணம் என்பது ஒருபுறமிருக்க, மறுபுறத்தில் இந்த அநீதிகளைக் கண்டும், கண்மூடிகளாக நாம் காக்கும் 'மௌனங்களும்' காரணங்கள் என்பதை நாம் மறுக்க முடியாது.

> ''வக்கற்ற நிலையில் இருக்கும் வறியோருக்குத்துணை நிற்காத போது நற்செய்திச் சவால்களுக்கே துரோகம் செய்கிறது, திருச்சபை. விளிம்பிற்குத் தள்ளப்பட்டு, செல்வாக்கற்ற நிலையிலிருக்கும் சாதாரண மக்களது அனைத்து உரிமைகளையும் நிலைநாட்டுவது நமது அரிய கடமையாகும்.''
>
> 2ம் அருள் சின்னப்பர் (1991)

இறைமக்கள் சமூகத்தைப் பொறுத்தவரை, அவர்கள் இயேசுவின் மனுவுருத்தாங்கலின் பிரதிபலிப்பாய் மாற வேண்டும் என்பதால், சிலுவையில் கைநெகிழப்பட்ட இயேசுவை அந்த ஏழைகளில் கண்டு, அவர்களின் அந்நிலைக்கான நச்சு வேர்களைக் கண்டறிந்து அகற்றும் பாரிய நற்செய்திப் பணியை மேற்கொள்ள அழைக்கப் படுகின்றார்கள். இதுவே பழைய ஏற்பாட்டின் இறைவாக்கினர் செய்த பணியும், புதியவானம், புதிய பூமி என முழக்கமிட்ட இயேசுவின் பணியாகும். எனவே எமக்குமுன் நீண்டு செல்லும் கால விரிப்பில், ஏழைகளுக்காகப் பாடுபட, அவர்களுக்காக வாழ எம் கால்களைப்பதிப்போமாக. இயேசுவின் சிலுவையும், அவரின் மனுவுருத்தாங்கலும் எப்போதும் எங்கள் நினைவில் இருக்கட்டும்.

### உசாத்துணை நூல்கள் :


GAUTHIER, Paul, Christ the Church and the Poor. London: Geoffery Chapman Ltd. 1964.

PALLARES, Cardenas, Jose, A Poor man Called Jesus, Philippines : Claretion Publication, 1982.

O' BRIEN, John, Theology and the Option for the Poor Collegeville, Minn, Liturgical Press. 1992.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிய மண்ணிற்கு இயேசுவை மீண்டும் அழைப்போம்

அருட்திரு. ஜே. நீக்கிலஸ்



ஆசிய மண்ணிற்கு இயேசுவை மீண்டும் அழைப்போம் என்று கூறுவதே வியப்புக்குரிய விந்தையாகத் தோன்றுகின்றது. ஆசிய மண்ணிலே பிறந்த இயேசு ஐரோப்பிய கலாச்சாரத்திற்குள் மறைக்கப்பட்டார் என்பது வரலாற்று உண்மை. இதனால் கிறிஸ்தவர்கள் தம் சொந்த மண்ணிலே அந்நியராகவும், கிறிஸ்தவம் ஐரோப்பாவில் இருந்து இறக் மதி செய்யப்பட்ட ஒரு மறையாகவும் கணிக்கப்படுகின்றது.'' கடந்த ஐந்து நூற்றாண்டு காலமாக, மறைபரப்பு பணியில் கிறிஸ்தவ சமயம் ஒரு தவறான தோற்றத்தை ஏற்படுத்தி வந்திருகின்றது. மறைபரப்பு நாடுகளின் மக்களுடைய வாழ்க்கைமுறை, சமுதாயப் பண்பாட்டு சூழலிலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஓர் அந்நிய சமயம் என்ற கருத்தை அது தோற்றுவித்து வந்திருக்கின்றது. எந் நாட்டிலிருந்து மறை பரப்புநர் வந்தார்களோ அந் நாட்டின் பண்பாட்டு பழக்க வழக்கங்களை புதிதாகத் திருச்சபை தோன்றும் இடங்களும் ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று. ஒரு நாடு கிறிஸ்தவத்தை புதிதாய் ஏற்கும் போது, அம் மக்கள் நற் செய்தியை வரவேற்கும் போது, அந்த இளம் திருச்ச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பையின் வழிபாட்டு முறைகள், மறை இயற் கொள்கைகள் அனைத்தும் மறைபரப்புநருடைய நாட்டுப் பண்பாடுகளை தழுவவேண்டிய நிலை ஏற்பட்டது " என்று அருள்திரு D. S அமலோற்பவதாஸ் கூறியுள்ளார். (காண்: நற்செய்தியும் பண்பாடும். பக். 17). உலகளாவிய ரீதியில் இக்கூற்று உண்மையென்பதை நாம் மறுக்கமுடியாது.

## பண்பாட்டு மயமாக்கல் முயற்சிகள்

இருப்பினும் ஒரு சில இடங்களிலே நற்செய்தித் தூதுவர்கள் தலத் திருச்சபையின் பாரம் பரியங்களை, பண்பாட்டு முறைகளை பாதுகாக்க அரும் பணி ஆற்றியுள்ளனர். சீனதேசத்திலே மத்தேயோ றிச்சி (Matteo Ricci) என்பவரும், தமிழ் நாட்டிலே றொபேட் டி நொபிலி (Roberd Di Nobili) மற்றும் பெஸ்சி (Beschi) அடிகளார் போன்றவர்கள் மக்களின் பண்பாட்டு முறைகளை ஏற்று மதித்ததோடு அவற்றின் வளர்ச்சிக்காகவும் தம்மை அர்ப்பணித்தனர். ஆனால் இவர்கள் பலரின் எதிர்ப்பையும் எதிர் கொள்ள வேண்டியிருந்தது. இதன் விளைவாக இவர்களின் முயற்சிகள் நீண்ட காலம் நிலைத்திருக்கவில்லை. எடுத்துக்காட்டாக றொபேட் டி றொபிலி அவர்கள் புணூல் அணியவும், புலால் உண்ணாமலிருக்கவும், தரையில் அமர்ந்து திருப்பலி நிறைவேற்றவும் திருத்தந்தை 15-ம் கிறகோரியாரின் (1623ல்) அனுமதியைப் பெற்றிருந்தார். இரண்டாம் வத்திக்கான் சங்கம் நடைபெற முன்பே, ஏறக்குறைய மூன்றூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன் பண்பாட்டு மயமாக்கல் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஆனால் இம் முயற்சிகள் பலராலும் ஏற்கப்படாமல் இருந்ததிற்கு காரணங்கள் உண்டு. ஐரோப்பிய கலாச்சாரத்தின் ஆதிக்கம் பலம் ஓங்கியிருந்தது.

> இயேசுவுக்கு சான்று பகர்வதே உண்மையான நற்செய்தி அறிவிப்பு

திருச்சபையிலே பண்பாடுகள் பற்றிய தவறான குறுகிய மனப்பான்மை மிகுந்திருந்தது. தலத்திருச்சபையிலும் இம்மனப்பான்மை நிலவியிருந்தது. இவை காரணமாக பண்பாட்டு மயமாக்கல் ஒரு மந்த நிலைக்கு மாறிவிட்டது.

## மறைபரப்பு பணியும் பண்பாடும்

இரண்டாம் வத்திக்கான் சங்கம் பல்வேறு மக்களின் கலாச்சாரங்களை நன் மதிப்போடு ஏற்கவும், பாதுகாக்கவும் பரந்த ஒரு கண்ணோட்டத்தைக் கொண்டிருந்தது. "மனிதரின் இதயத்திலும் மனதிலும் அல்லது மக்களின் வழிபாட்டு முறைகளிலும் பண்பாடுகளிலும் விதைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பட்டு காணப்படுகின்ற நன்மையானவை எவையும் அழிந்து போவ தில்லை என்பது மட்டுமன்று, மாறாக அவை நலப்படுத்தப் பெற்று, உயர்த்தப் பெற்று நிறைவு செய்யப்படுகின்றன......" (Evangelii Nuntiandi = EN எண். 9). மறை அறிவிப்பின் மையமாய் இருப்பது நம் மீட்பரான இயேசுக் கிறிஸ்துவே. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் மண்ணிலே மனித அவதாரமான நம் ஆண்டவர் இயேசு மக்க ளின் இதயங்களிலே ஆட்சி புரிதல் வேண்டும். அவ்வாறு அவர் ஆட்சி புரிவதற்கு அவரின் நற் செய்தியே எமக்கு வழிகாட்டியாய் உள்ளது. இந் நற் செய்தியை நன்கு புரிந்து கொள்ளவும், ஏற்றுக் கொள்ளவும் மக்களின் பண்பாட்டு அடையாளங்கள் ஓர் சிறந்த ஊடகமாக அமைந்துள்ளன. ஒரு பண்பாட்டின் ஊடாகவே இயேசு தன்னை உலகிற்கு வெளிப்படுத்தினார். இவ்வாறு ஒரு பண்பாட்டில் வேரூன் றாத நற்செய்தி விசுவாச ஆழத்திற்கும் அர்ப்பணத்திற்கும் அத்திவா ரமாய் இராது. "மனுவுடல் ஏற்பின் மூலம், கிறிஸ்து தாம் கூடி வாழ்ந்த மக்களுடைய சமுதாய, பண்பாட்டுச் சூழ்நிலைகளோடு எவ்வித உணர்வுடன் தம்மைப் பிணைத்துக் கொண்டாரோ, அவ்வி தமே திருச்சபையும் மீட்பின் மறைபொருள், இறையவரால் வழங்கப் பட்ட வாழ்வு ஆகியவற்றை எல்லோருக்கும் அளிக்க இயலும் வகையில் இந்தக் குழுக்கள் அனைத்திலும் நுழைந்து இடம்பெற வேண்டும்." (EN எண். 10). பண்பாட்டு மயமாக்கலுக்கு அடித்தளமாய் விளங்குவது கிறிஸ்துவின் மனித அவதாரமே. எனவே கிறிஸ்து எமது மண்ணிலே பிறக்க வேண்டும். எமது பண்பாட்டிலே இரண்டறக் கலந்த கிறிஸ் துவை நாம் காண வேண்டும். அப்பொழுது எமது பண்பாடும் கிறிஸ் துவினால் மீட்கப்படும்.

## ஆசியாவில் நற்செய்தி அறிவிப்பு

அண்மையில் நடந்த ஆசிய ஆயர் பேரவையின் நிறைவாக நம் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் 06. 11. 1999ல் தனது அப்போஸ்தலிக்க மடலை வெளியிட்டுள்ளார். மூன்றாவது மில்லேனிய நுழைவாயிலில் இருக்கும் நாம் இயேசுக் கிறிஸ்துவை ஆண்டவர் என்று அறிக்கையிட அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை வலியுறுத்திக்

> நற்செய்தி அறிவிப்பு மதமாற்றத்தை விட மனமாற்றத்தையே முதன் மையாகக் கொண்டுள்ளது.

கூறியுள்ளார். அவர் இந்தியாவுக்கு பயணம் செய்த போதும் ஆசியா விற்கு இயேசு அதிகம் தேவைப்படுகின்றார், நற்செய்தியை நாம் அறிவிக்காமல் இருக்கமுடியாது என்பதைத் தெளிவாகவும் ஆணித்தர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகவும் குறிப்பிட்டார். புனித பவுல் அப்போஸ்தலரின் கூற்றுப்படி: 'நாங்கள் எங்களையல்ல, இயேசுகிறிஸ்துவைப் பற்றியே அறிவிக்கின்றோம். அவரே ஆண்டவர் எனப் பறை சாற்றி வருகின்றோம். நாங்கள் இயேசுவின் பொருட்டு வந்த உங்கள் பணியாளர்களே'' (2கொரி 4:5) திருத்தந்தையின் கூற்றுப்படி நற்செய்தி ஆண்டவரின் பணிப்புரையே எல்லோரும் நற்செய்தியைக் கேட்பதற்கு உரிமை உடையவர்கள். இயேசுகிறிஸ்துவை ஆண்டவர் என்று வெளிப்படையாகப் போதிக்காமல் நற்செய்தி அறிவிப்பு இருக்கமுடியாது. (Ecclesia In Asia எண் 19) = (E. A)

''பல மறைகளும் கலாச்சாரங்களும் நிறைந்த நம் மண்ணில் கிறிஸ்துவின் நற்செய்தியைப் போதிப்பதில் நாம் மற்றவர்களின் சுதந்திரத்தை மதித்து நடக்கவேண்டும். மற்றைய மறைகளை மதிப்பது நற்செய்தி அறிவிப்பை நிறுத்துவதாய் அமையாது. மனித உள்ளங்களிலே ஆழப் பதிந்திருக்கும் ஏக்கங்களுக்கும் வினாக்களுக்கும் பதில் கொடுப்பதும், மனிதனிலே இறை ஆவியின் உந்துதலை மதிக்கும் முறையில் நாம் செயற்பட வேண்டும். பிற மறைகள் இயேசுக் கிறிஸ்துவிலே நன்மதிப்பு கொண்டிருந்தாலும், அவரை இறைவனின் ஒரேயொரு வெளிப்பாடாக ஏற்றுக் கொள்வதிலே தயக்கம் கொண்டுள்ளன'. (EA எண் 20). இயேசுக் கிறிஸ்து உலகனைத்தினதும் மீட்பர் என்பது கிறிஸ்தவ விசுவாசிகளின் ஆழமான அசைக்கமுடியாத நம்பிக்கை இக்கோட்பாட்டை எவ்வளவுக்கு பிறமறைகள் ஏற்கும் என்பதில் ஐயமிருப்பினும் நாம் நற்செய்தி அறிவிப்பிலே பின்வாங்க முடியாது. ஏனெனில் நற்செய்தி அறிவிப்பு மதமாற்றத்தை விட மன மாற்றத்தையே முதன்மையாகக் கொண்டுள்ளது மனந் திரும்பி நற்செய்தியை நம்புங்கள் என்ற இயேசுவின பணிப்புரை இன்றும் தொடர்ந்து எம் மண்ணிலே ஒலிக்கவேண்டும்.

## பண்பாட்டில் வெளிப்படும் இயேசு

இயேசுவுக்கு சான்று பகர்வதே உண்மையான நற்செய்தி அறிவிப்பு. இயேசுவின் விழுமியங்களை அவரது பண்புகள் நிறைந்த போதனைகளை நாம் பிறருக்கு வழங்கும் பொறுப்பு எமக்குண்டு. ஆசிய மண்ணிலே இயேசுவின் பெயர் வேரூன்ற வேண்டுமென்றால் அந்த மண்ணின் கலாச்சார மரபுகள் வழியாகவே அது சாத்தியமாகும். மக்களின் வாழ்வோடும், ஏக்கங்களோடும் அன்றாட பிரச்சனைகளோடும் பின்னிப் பிணையாத இயேசுவின் நற்செய்தி அர்த்தமற்றதாகிவிடும். மக்களின் சிந்தனைப் போக்கு, அறிவியல், சமூகவாழ்வு, இறையியல், ஆன்மீகம் ஆகியவற்றில் இயேசுவின் வாழ்வும், போதனையும் அர்த்தம்பெற வேண்டும். நற்செய்தி ஆசிய நாட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாடுகளை ஊடுருவி நின்றால் இயேசுவோடு நெருங்கிய உறவு ஏற்படவாய்ப்பு உண்டு. எனவே நற்செய்தியும் பண்பாடும் ஒன்றுக்கொன்று இசைவுள்ளதாய் இருப்பது இன்று அவசியமாய் உள்ளது. ''நற்செய்தியும் பண்பாடும் பிளவுபட்டு முரண்பட்ட நிலையில் இருப்பது தான் நம் காலத்தின் கவலை'' என்று திருத்தந்தை ஆறாம் சின்னப்பர் முன்பு குறிப்பிட்டார். இதனால்தான் இயேசுவும் அந்நியப்படுத்தப்படுகின்றார். ஆசிய மண்ணிற்கு இயேசுவை மீண்டும் அழைப்போம் என்று கூற வேண்டிய நிலை இன்று ஏற்பட்டுள்ளதை நாம் மறுக்கமுடியாது. எமது வாழ்க்கை முறையும், நற்செய்தி அறிவிப்பும், வழிபாடும், ஆன்மீக வழிமுறைகளும் எம் சொந்த மண்ணின் பண்பாட்டிற்கு இசைவுள்ளதாய் இன்னும் மாறவில்லை என்ற உண்மையை உணராத பலர் எம் மத்தியில் இன்று உள்ளனர். பிறமறைகள் இயேசுவை ஒரு அந்நியவாசக் கருதும் நிலைப்பாடு இருப்பதை நாம் நன்கு சிந்தித்து மீளாய்வு செய்வது அவசியம்.

## பண்பாட்டு மயமாக்கலின் பரிணாமம்

இயேசுவை நாம் எமது சொந்த மண்ணுக்குரியவர் என்ற மனநிலையை வளர்ப்பதற்கு எமது சிந்தனைப் போக்கு விரிவடையவேண்டும். இயேசுவின் உருவத்தை நாம் ஐரோப்பிய ஓவியங்கள் ஊடாகவே பார்க்கின்றோம். எமது சொந்த கலைவடிவில் அவரைக் காண்பது மிக அரிதாகவே உள்ளது. இயேசு ஒரு உண்மையான குரு, ஆசான், வழிகாட்டி என்ற தன்மைகளை வெளிக்காட்டுவது பலராலும் ஏற்றுக்கொள்ளக் கூடியனவாகும். ஏழைகள், தாழ்த்தப்பட்டோர், ஒடுக்கப்பட்டோரின் குரலாகவும், அவர்களுக்கு விடுதலையளிப்பவராகவும் அவர் திகழ்கின்றார் என்பதும் தெளிவுறக் காட்டப்பட வேண்டிய உண்மை.

> ஒரு பண்பாட்டில் வேரூன்றாத நற்செய்தி விசுவாச ஆழத்திற்கும் அர்ப்பணத்திற்கும் அத்திவாரமாய் இராது.

அவர் நீதிக்காக, உண்மைக்காகப் போராடியவர். பாவிகளுக்காகத் தன்னுயிரை அர்ப்பணித்தவர் போன்ற உண்மைகள் எமது கலை, கலாச்சார வடிவங்களிலே வடிவமெடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பெஸ்கி அடிகளாரின் தேம்பாவணி, ஹென்றி கிருஷ்ணபிள்ளையின் இரட்சணிய யாத்திரிகம் போன்றவை எமக்கு சிறந்த எடுத்துக் காட்டுக்களாகத் திகழ்கின்றன. எமது மறைக்கல்வி, மற்றும் வழிபாட்டு முறைகளிலும் இயேசுவைப் புரிந்து ஏற்றுக்கொள்ளும் பண்பாட்டு முறைகள் போதியளவு பயன்படுத்தப்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். இதுபோன்ற முயற்சிகளுக்கு சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்தவர் அருள்திரு D. S. அமலோற்பவதாஸ் அடிகளார். பண்பாடுகளின் ஊடாகவே நாம் அனைவருக்கும் நற்செய்தி அறிவிக்கமுடியும். இதன் வழியாகவே ஆசியாவில் இயேசுவை இலகுவில் இனம் காண முடியும் என்பது உறுதி.

## உசாத்துணை நூல்கள்


Pope John Paul II. Post Synodal Apostolic exhortation, Ecclesia in Asia.

D. S அமலோற்பவதாஸ்; நற்செய்தியும் பண்பாடும்

பாப்பிறை ஆறாம் சின்னப்பர்; நற்செய்தி அறிவிப்பு பணி (திருமடல்) (Evangelii Nuntiandi)

இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு.


"வார்த்தையை அறிவிப்பதும், விசுவாசத்திற்கும் மதமாற்றத்திற்கும் மக்களை அழைப்பதும், நற்கருணை வழிபாட்டில் பங்கு கொள்ள விசுவாசிகளை ஒன்று திரட்டுவதும், கிறிஸ்துவுக்கு சாட்சி சொல்லுகின்ற வாழ்வுக்கும் அன்புப்பணிக்கும் மக்களை ஆயத்தப்படுத்துவதும் ஆகிய இவைமட்டும் போதாது. ஆனால் இவையனைத்திலும், மறைபணியின் ஒவ்வொரு நிலையிலும் அதன் பல்வேறு பணிகளிலும் நாட்டிற்கும் வட்டாரத்திற்கும் தகுந்தாற்போல சூழ் நிலைக்கும் மரபுகளுக்கும் ஏற்றாற்போல, பண்பாட்டு சமய வெளிப்பாடுகளுக்கு இயைந்தாற்போல, இன்றைய சமுதாயத்தின் சிக்கல்களுக்குத் தீர்வுகாணும் அக்கறையோடு தன்னைத் தழுவி அமைத்துக்கொள்ளவேண்டும்''

D. S அமலோற்பவதாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைத்தூதுப் பணியாளன் கிறீஸ்து

## -யூபிலி ஆண்டில் கிறீஸ்துவை மீளப் பார்த்தல்

**சகோ. சில்வெஸ்ரர் அ. ம. தி.**



எபிரேய மொழியில் யூபிலி ஆண்டு "ஷெனாத் ஹய்யோபல் (Shenat Hayyobel) என்றழைக்கப்பட்டது. "ஷெனாத்" என்ற சொல்லுக்கு 'ஆண்டு', "வருடம்" என்பது பொருள், "யோபல்" என்னும் சொல் ஆட்டுக் கடா என்று பொருள்படும். அதிலிருந்து "ஆட்டுக் கொம்பு" என்ற பொருள் தோன்றி, "எக்காளம் போன்று ஊதப் படும் கொம்பு" என்ற பொருள் பெறலாயிற்று. (யோசு 6:5-11)

கடவுள் மனுவுருவெடுத்ததில் தன் தொடக்கத்தைக் கொண்டு இருக்கும் மீட்பு மறைபொருள் இயேசுவின் இறப்பு — உயிர்ப்பில் அடங்கி இருக்கின்றது. ஆகவே இந்த யூபிலி எல்லா விசுவ சிகளையும் ஒப்புரவு மகிழ்ச்சிக்கு இட்டுச் செல்வதால் வரவிருக்கும் யூபிலி சிறப்பு மிக்கதாகும்.

மானிட மகன் கிறீஸ்துவின் இறைத்தூதுப் பணியானது ஏழை எளியவர்க்கும், பணக்காரர்களுக்கும், உள்ளம் உடைந்து வருந்துபவர் களுக்கும், உபாதைப்படுபவர்களுக்குமே. அவரது இந்த இறைத்தூதுப் பணியானது தூய்மையற்ற, மனித நேயத்திற்கு புறம்பான அனைத்து தடைச் சுவர்களையும் தாண்டிய தனிமனித, சமூக அமைப்புகளுக்கு இடையிலான ஒன்றிப்பே.

இந்த மாபெரும் யூபிலி ஆண்டிற்கான தயாரிப்புக்காக 'மூன்றாம் ஆயிரம் ஆண்டு வரும் வேளையிலே (Tertio millenio Adveniente) என் னும் மறைத்தூது திருமடலை நம் திருத்தந்தை 2-ம் அருளப்பர் சின்னப்பர் வெளியிட்டார். இம் மடலில் எண் 51 பின்வருமாறு கிறீஸ் துவின் இறைத்தூதுப் பணி பற்றி கூறிநிற்கின்றது. "கிறீஸ்து எளியோ ருக்கு நற்செய்தி அறிவிக்க வந்தார் எனில் (மத் 22:5; லூக் 7:22)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சபையும் ஏழைகளுக்கும், ஒடுக்கப்பட்டவருக்கும் முன்னுரிமை காட்டுவது இந்த ஆண்டில் இன்னும் அதிகமாக வலியுறுத்தப்பட வேண்டும்''

சமூகத்தில் பாதிக்கப்பட்டுள்ள பல நிலையினருக்கான உரிமைகள் அதிலும் குறிப்பாக பெண்களுக்கான சம உரிமைகள் இந்த யூபிலி ஆண்டில் பேணப்பட வேண்டும். குடும்பம் திருமணம் இவற்றின் புனிதமும் நல் வாழ்வும் இந்த யூபிலி ஆண்டில் தனிக்கவனம் செலுத்தப்பட்டு மானிட உறவுகளை வளர்த்தெடுக்கும் ஆண்டாக இந்தப் புனித ஆண்டு துலங்க வேண்டும்.

புனித லூக்கா நற்செய்தியில் காணப்படுகின்ற 4:16-30 என்னும் பகுதி இறைவாக்குகள் மானிட மகனின் இறைத்தூதுப் பணிக்கு அத்திவாரமான வாக்குகளாக அமைந்து விடுகின்றதைக் காண முடிகின்றது. இவ்வாக்குகளை நாம் இறைவாக்கு உரைப்பவரான எசாயாவின் பகுதிகளில் காண்கின்றோம் 61:1–2, 58:2 மானிட மகனின் இந்த இறைத்தூதுப் பணியானது ஏழை எளியவர்களை நோக்கியதாகவும், பல்வேறுபட்ட அடிமைத் தளைகளில் இருந்தவர்களை மீட்பதாகவும், உண்மையான விடுதலை வாழ்வை மானிட மகன் மானிட இனத்திற்கு வழங்குவதாகவுமே அமைந்திருந்தது. இதனைப் புதிய ஏற்பாட்டு நூலின் அடிப்படையில் நோக்குவோமாயின் மானிட மகனின் இறைத்தூதுப் பணியானது ஒரு புதிய பரிமாணத்தை அல்லமாறாக ஒரு புனரமைக்கப்பட்ட வாழ்வை, சீரமைக்கப்பட்ட பணிமுறையினை ஆண்டவரின் அருள் பொழியப்படுகின்ற ஆண்டை அறிவிப்பதாகவும் எல்லோரும் ஒன்று கூடுகின்ற ஒருமைப்பாட்டை அறிவிப்பதாகவும் அமைந்து விடுகின்றது.

இம் மானிட மகனின் சிறப்பான பண்புகளில் ஒன்றாக விளங்குவது ஏழைகளையும், ஒதுக்கப்பட்டு புறக்கணிக்கப்பட்டோரையும் அரவணைக்கும் தன்மையாகும். இதனை நாம் நற்செய்தி நூல்களில் பல்வேறு இடங்களில் காண்கின்றோம். இதனால் மதத் தலைவர்கள் மதம் பிடித்தவர்களாக, இம் மானிட மகனை ஒரு போசனப் பிரியன் என்றும், குடிகாரன் என்றும் ஏழை எளியவர்களின் நண்பன் என்றும் வர்ணிக்கின்றார்கள் (மத். 11:19) ஆனாலும் இந்த மக்கள் மீது கொண்ட அரவணைப்பும் அருகாமையும் வளர்ந்துவந்த தோன்றாகவும், விஷேட விதமாக அவர்களுக்கு வேண்டிய ஒருவராகவுமே தம்மை காட்டிக்கொண்டதைக் காண்கின்றோம். மற்றும் ஏற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு அரவணைக்கின்ற தன்மை, கருணையே வடிவான இரக்கம், புரிந்து கொண்டு ஏற்றுக்கொள்வதன் மூலம் மன்னிக்கின்ற மகான் களின் தன்மை நாளுக்கு நாள் மக்களை அவர்பால் ஈர்த்து இழுத்தது.

அன்றைய யதார்த்த நிலையில் வரி தண்டுவோர்கள் உரோமை யரின் கூலியாட்களாக எண்ணப்பட்டு, புறந்தள்ளப்பட்டு, யூத மக்க ளினால் ஒதுக்கப்பட்டு வாழ்ந்து வந்தனர். ஏனெனில் உரோமையர் பலவந்தமாக யூத நாட்டை கைப்பற்றியதாகவும் அவர்கள் யூதர் களின் பரம்பரை எதிரிகளாகவும் எண்ணப்பட்டனர். எனவே உண்மை யில் இவ் வரி தண்டுவோர்கள் உரோமையரின் ஆட்களாக வகைப் படுத்தப்பட்டு, புறக்கணிக்கப்பட்டு வந்தனர் ஆனாலும் மனிட மகனின் உண்மையான சகோதர உணர்வு, நட்பு இவர்களையும் ஆட்கொண்

> **மானிட மகன் கிறீஸ்துவின் இறைதூதுப் பணியானது ஏழை எளி யவர்க்கும் பணக்காரர்களுக்கும், உள்ளம் உடைந்து வருந்துபவர் களுக்கும், உபாதைப்படுபவர்களுக்குமே.**

டது. அதன் பயன், அவர் அவர்களுடன் உணவருந்தி அவர்களுடன் உரையாடி, உறவாடி இறைவனது அளவுகடந்த அன்பினை எடுத்துக் காட்டினார். ஆனாலும் அன்றைய சமுதாய நோக்கின் அடிப்படை யில் பார்க்கின்றபோது அவரின் இச் செயற்பாடு ஒரு தீவிரத் தன்மை கொண்டதாகவும் யதார்த்தத்திற்கு எதிராகவுமே அமைந்து காணப் பட்டது. ஏனெனில் வரி தண்டுபவர்கள் தமது சொந்த நாட்டை காட்டிக்கொடுக்கின்ற தேச விரோதிகள் எனக் கணிப்பிடப்பட்டு வந்த னர். ஆனால் மனிட மகனால் வரி தண்டுபவர்களைத் தாண்டிச் செல்ல முடியவில்லை. இறைவனது தாகத்தை தன்னில் கொண்டவர் தான் இம் மானிட மகன் கிறீஸ்து. அவர் அவர்கள் அனை வரையும் அழைத்தார், மன்னித்தார், புது வாழ்வு வழங்கினார் (லூக் 19:1—6). இது இறைவனின் அருளின் செயற்பாடு, ஓர் வெளிப் பாடு என அழைக்கப்பட்டது. ஒரு புதுவகையான உறவினை, மாற் றத்தை உருவாக்கி உணர்வை ஊட்டப்பண்ணியது.

மண்ணிலே வந்து உதித்த இம் மானிட மகனின் இன்னுமொரு பண்பாகத் திகழ்வது குணமாக்குகின்ற அருட் செயலாகும். இது மண் ணிலே மானிட மகன் வாழ்ந்த வரலாற்று நிகழ்வுக்கு ஓர் உதாரண மாகவும் கூட காணப்படுகின்றது. இந்த குணமாக்குதல் உடலையும் உள்ளத்தையும் தொடுகின்ற ஒரு செயற்பாடாக தென்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் காலத்தில் உண்மையாகவே விஞ்ஞான அறிவுகளும், உளவியல் முன்னேற்றங்களும் நாம் இன்று காண்பவை போன்று காணக் கூடியதாக இருக்கவில்லை. உண்மையாக மனோநிலை வளர்ச்சிகளும், செயற்பாடுகளும் காணப்படவில்லை. இவை யதார்த்த நிலைப்பாடாக விளங்கியது.

மேலும் மானிட மகன் எல்லோரையும் அரவணைப்பவராகவும எல்லோருக்கும் ஏற்ற துணையாளராகவும் துலங்கினார். இவர் எல்லா மனிதருடையவும் சகோதரனாகவும் விளங்கினார். தமது தந்தையை எம் தந்தையாக்கும் அந்த உண்மையான பகிர்வில் தம்மை அர்ப் பணித்தார். இது ஒரு தியாகம் கலந்த அர்ப்பணிப்பு. உண்மையான அர்ப்பணத்தையும், மற்றவர்களுக்காக வாழுகின்ற, பகிருகின்ற தன்மை உடைக்கின்ற, நொருக்குகின்ற நிலைப்பாட்டை வெளிப் படுத்தி அதனை வாழ்ந்து கல்வாரியில் அதற்கு உன்னதமான முழுப்பொருள் தந்தார். இறுதியாக தம் அன்னையை எம் எவ்வொரு வருக்கும் அன்னையாகத் தந்தார். அவர் தனது அன்னையைப் பார். த்து "அம்மா இதோ உன் மகன்" என்றார். மீண்டும் அருகில் நின்ற தம் அன்புச் சீடரைப் பார்த்து "இதோ உன் தாய்" என்றார் (யோவா 19:26). இது அர்ப்பணவாழ்வின் இறைத்தூதுப் பணியின் கொடுமுடி.

இயேசுவின் இலட்சியம் இறைத்தூதுப் பணி மூலம் இறையாட் சியை மலரச் செய்தல். அநீதிகளை அழித்து புதிய சமுதாயம் படைக்க வந்தார். இன்று எம் தமிழ் சமூகத்தில் இடம் பெறுவது என்ன? இடம் விட்டு இடம் சென்று வாழ்வது அன்றாட நிகழ்சியாகி விட்டது.

**குடும்பம் திருமணம் இவற்றின் புனிதமும் நல் வாழ்வும் இந்த யூபிலி ஆண்டில் தனிக்கவனம் செலுத்தப்பட்டு மானிட உறவுகளை வளர்த்தெடுக்கும் ஆண்டாக இந்தப் புனித ஆண்டு துலங்க வேண்டும்.**

தரமான கல்விக்காக நல்ல வேலைக்காக, வளமான வாழ்வுக்காக, அமைதியான சூழலுக்காக சிலர் குடி பெயர்ந்து செல்கின்றார்கள் சொந்த ஊரை விட்டு வேறொரு ஊரில் குடியேறுகின்றார்கள். அழுத கண்களோடு குழிவிழுந்த கன்னங்களோடு, ஒட்டிய வயிறோடு அல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும் மக்கள் இன்று கிறீஸ்தவர்களாகிய எம்மை, அதுவும் கிறீஸ்துவின் இறைத்தூதுப்பணியை தொடர்ந்தாற்றும் எம்மை நோக்கி" வாழ்விற்காக" கூக்குரல் எழுப்புகின்றனர் அவர்களின் குரலில் இறைவனின் குரல் உரக்க ஒலிக்கின்றது. ஒடுக்கப்பட்டவர்களின் உரிமைக்காக குரல் எழுப்பிய இயேசு இன்று எம்மூடாக இம் மக்களின் குரலுக்கு செவி மடுக்க வேண்டும். அவர்களின் விழிநீர் துடைக்க, நொருக்கப்பட்ட அவர்களின் வாழ்விற்கு நம்பிக்கை ஊட்ட இன்றே இந்தப் புனித ஆண்டிலேயே புறப்பட வேண்டும்: "ஆண்டவரின் ஆவி என்மேல் உள்ளது. ஏனெனில் அவர் எனக்கு அருள் பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும்...... ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும்" *(லூக் 4:18—19)*

## உசாத்துணை நூல்கள்


1. **BREDIN EAMONN, Rediscovering Jesus** claretian publication, Quezon City, Phillippines, 1990
2. **GARRIGOU – LAGRANGE Reginald, Christ the Saviour,** B. Herder Book, Co., South Broadway, St. Louis mo, 1952
3. **MAGNANTE Antonio, "Jesus, Missionary and Evangelizer",** in **Omnis Terra,** 287 (Ap. 1998) 153-157
4. **JOHN PAUL II, Tertio Millennio Adveniente, ST. Pau** Press, Bombay, 1996.


" ஆண்டவருடைய ஆவி
என்மேல் உளது;
ஏனெனில், அவர் எனக்கு
அருள் பொழிவு செய்துள்ளார்.
ஏழைகளுக்கு நற்செய்தியை
அறிவிக்கவும் சிறைப்பட்டோர்
விடுதலை அடைவர், பார்வையற்றோர்
பார்வை பெறுவர் என முழக்கமிடவும்
ஒடுக்கப்பட்டோரை விடுதலை
செய்து அனுப்பவும்
ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை
முழக்கமிட்டு அறிவிக்கவும்
அவர் என்னை அனுப்பியுள்ளார்."
(லூக் 4 , 18 — 19)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3ம் மில்லேனியத்தில் இலங்கைத் திருச்சபையின் வாழ்வும் பணியும்

(மேல்கூறப்பட்ட தலைப்பில் கடந்த 2-12-99 அன்று புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது. அதில் ஒருங்கிணைப்பாளராக அருட்பணி. மைக்கல் சவுந்தர நாயகம் அடிகளார் பங்கேற்று வழிநடத்தினார். இதில் திருமதி சுனிதா (ஆசிரியை, அரியாலை ஸ்ரான்லி கல்லூரி), திரு ரங்கன் (ஆசிரியர், கோப்பாய் கிருஸ்தவக் கல்லூரி), மறையாசிரியர் திரு சவுந்தரம், யாழ் திருக்குடும்ப கன்னியர் சபையின் ஆலோசகருள் ஒருவரான அருட் சகோதரி வேர்ஜீனி, அருட்பணி. ரவிச்சந்திரன், மற்றும் அருட்சகோதரர் அ. யோ. ஜெயசீலன் ஆகியோர் பங்குபற்றினர். இக்கலந்தாய்வரங்கு ''இறையியல் கோலங்கள்'' ஆசிரியர் குழுவினரால் ஒழுங்கு செய்யப் பட்டிருந்தது)

## கலந்தாய்வரங்கு

**Fr. மைக்கல் :** இன்றைய கலந்தாய்வரங்கிற்கு கொடுக்கப்பட்ட தலைப்பு, ''3ம் மில்லேனியத்தில் திருச்சபையின் வாழ்வும் பணியும்''. இது பரந்த தலைப்பாகவுள்ளது. இதை ஓரளவு மட்டுப்படுத்துவது நல்லது. அண்மையில் 2ம் அருள் சின்னப்பர் இந்தியாவில் 3ம் மில்லே னியத்தில் ஆசிய திருச்சபை' பற்றி வலியுறுத்திப் பேசியுள்ளார். ஆசியாவில் மறையறிவிப்பு 3ம் மில்லேனியத்தில் அவசியம் செய்யப் பட வேண்டும் எனவும் பேசியுள்ளார். எனவே நாம் 3ம் மில்லேனியத் தில் ஆசிய திருச்சபையின் வாழ்வு பற்றி.....

**திரு சௌந்தரம்:** இது நல்லது என நானும் கருதுகின்றேன்

**திரு ரங்கன்:** ஆசிய திருச்சபை பற்றி நாம் கதைப்பது எவ்வளவிற்கு எடுபடுமோ தெரியாது. எனவே நாம் இதை நன்றாக சுருக்கி எமது மறைமாவட்டம் பற்றி பேசலாம்.

**திருமதி சுனிதா :** நானும் திருவாளர் ரங்கனின் கருத்தை ஆதரிக் கின்றேன். வழிகாட்டல் அனைத்தும் இன்று புத்தக வடிவிலேயேயுள் ளது. எனவே மக்கள் இலகுவாக விளங்கக்கூடிய வகையில் கதைக்க லாம் என எண்ணுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Sr. வேர்ஜினி :** பாப்பரசர் ஆசிய மக்களின் வளர்ச்சியை விரும்புகின்றார். ஆசிய மக்களும் இறைவனைப் பற்றி ஆர்வமாகவுள்ளனர். ஆசிய மக்கள் மேலும் இறைவனைப்பற்றி அறிவது வரவேற்கத்தக்கது. எனவே நாம் ஆசிய திருச்சபை பற்றி பேசலாம் என கருதுகிறேன்.

**Bro ஜெயசீலன் :** பல்வேறுபட்ட தளங்கள் காணப்பட்டாலும், யாழ் மக்களே அதிகம் 'இறையியல் கோலங்களை' வாசிக்கின்றனர். எனவே யாழ் திருச்சபையை உள்ளடக்கியதாக அமைவது நல்லது.

**Fr. ரவிச்சந்திரன் :** 3ம் மில்லேனியத்தின் திருச்சபையின் வாழ்வும் பணியும் பற்றி அதிகம் முன்வைக்கப்பட்டுள்ளது. 2ம் வத்திக்கான் சங்கம்கூட 3ம் மில்லேனியத்திற்கான ஒரு சங்கமாகவேயுள்ளது. ஆசிய ஆயர் மன்றமும இதை நன்கு ஆய்ந்துள்ளது. எனவே நாம் எமது தமிழ்த்திருச்சபையை நோக்குதல் பலன் தரும் என எண்ணுகின்றேன்.

**Fr. மைக்கல்:** இலங்கையில் தமிழர் செறிந்து வாழ்வதனால், நாம் இலங்கைத் திருச்சபையின் வாழ்வும் பணியும் பற்றி கதைக்கலாம் என எண்ணுகின்றேன். அடிப்படையில் திருச்சபைபற்றி மயக்கங்கள் இருக்கலாம். எனவே திருச்சபை என்றால் என்ன என்று கருதுகின்றீர்கள்?

**சுனிதா :** திருநிலையினரையும் பொதுநிலையினரையும் உள்ளடக்கியதே திருச்சபை. எல்லோரும் சேர்ந்த ஒரு அங்கத்துவமே காணப்படுகின்றது. ஒவ்வொருவரும் தமக்கென தனிப்பட்ட பணிகளை பிரித்துக் கொண்டமையினால் ஒரு பிரிவு ஏற்பட்டுள்ளது. பொது நிலையினருக்காகவே திருச்சபை. பொதுநிலையினரே கூடுதலான அங்கத்துவம் வகிக்கின்றனர்.

**சௌவுந்தரம்:** கொள்கையளவிலேயே பொதுநிலையினருக்காக திருச்சபையுள்ளது. உண்மையில் அங்கு ஒரு பிரிவு உள்ளது. "ஆட்சிபீடமே திருச்சபை" என்ற போக்கு காணப்படுகின்றது. உண்மையில் இரண்டையும் உள்ளடக்கியதே திருச்சபை. இருவரும் தமது அழைப்பை உணரவேண்டும். திருநிலையினர் படியிறங்கி வந்து பொதுநிலை விசுவாசிகளோடு அந்த அழைப்பில் வித்தியாசம் காட்டாது வாழ வேண்டும். அப்போதுதான் எமது தலத்திருச்சபை 3ம் மில்லேனியத்தில் வாழப்படும் என கருதுகின்றேன்.

**Fr. மைக்கல்:** திருநிலையினர், பொதுநிலையினரது வாழ்வு சரியாக யாழ்த் திருச்சபையில் நீர் முன்வைக்கக்கூடிய நடைமுறைகள் எவை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரங்கன்: வழிபாட்டில் மட்டுமே திருநிலையினரும், பொதுநிலையினரும் ஒருங்கிணைகின்றனர். வழிபாடு தவிர்ந்த விடயங்களிலும் பொதுநிலையினரின் பணிகள் பொறுப்புடன் முன்னெடுக்கப்படல் வேண்டும். உதாரணமாக கருத்தரங்குகள் மூலம் அவர்களது பணியினை வலியுறுத்த வேண்டும் என எண்ணுகின்றேன்.

Fr. மைக்கல்: இது பற்றி உங்கள் கருத்து...

Fr. ரவி: மேலதிக விடயங்கள் சிலவற்றையும் நான் சொல்ல விரும்புகின்றேன். பொதுநிலையினரும், திருநிலையினரும் சேர்ந்து, இணைந்து வாழ செயற்பட வேண்டும். பங்கேற்கும் அமைப்புக்கள் எல்லாமட்டங்களிலும் ஏற்படுத்தப்படவேண்டும். பொதுநிலையினர் திருச்சபை எடுக்கும் தீர்மானங்களில் கூடிய பங்கு வகிக்க இடம் கொடுக்க வேண்டும். பங்கேற்கும் அமைப்புக்களில், கிறிஸ்தவ விசுவாசிகளின் மகத்துவத்தில் சமத்துவத்தை குருக்கள் உணர்ந்து செயற்பட வேண்டும். தமது மகத்துவத்தை ஏற்றுக்கொள்ளும் ஒரு விழிப்புணர்வு பொதுநிலையினரிடம் ஏற்படுத்தப்பட வேண்டும். இருபக்கமும் விழிப்புணர்வு ஏற்படும்போது பங்கேற்கும் அமைப்புக்கள் கூடிய பலன் தரும். யாழ்த்திருச்சபையில் பொதுநிலையினருக்கு அவசியமாகவும், அவசரமாகவும் இறையியல் கற்கக்கூடிய வாய்ப்புக்களை ஏற்படுத்த வேண்டும்.

Fr. மைக்கல்: 2ம் அருள் சின்னப்பர் ''ஆசியாவில் திருச்சபை'' என்னும் ஏட்டில் உங்கள் கருத்துக்களை மிகத் தெளிவாக வலியுறுத்தியிருக்கின்றார். அதன் ஒளியில் பெண்களுக்கு சமஉரிமை திருச்சபையில் கொடுக்கப்பட வேண்டும் என்பதுபற்றி...

சுனிதா: இது ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதொன்றாகும். பெண்களுக்கும் ஆற்றலும் சக்தியும் உண்டு. இஸ்ராயேலர் வரலாற்றில் பெண்கள் ஒடுக்கப்பட்டு, ஆலயங்களுக்கு வரக்கூடாது என்று இருந்ததினாலும், அதன் தொடர்ச்சியாக திருச்சபை வந்ததினாலோ என்னவோ பெண்கள் ஆலய மட்டங்களோடு மட்டும் இருந்துவிடுகின்றனர். பெண்களுக்கு இன்னென்ன பணி இருக்கின்றது என்று கூறும் சட்டக்கோவை சட்டங்களை மக்களுக்கு தெரிவிக்க வேண்டும். இவ்வாறு ஒரு தெளிவை பெண்களுக்குள் ஏற்படுத்தும்போது அவர்களும் இதில் அதிகம் பங்கு வகிப்பர் என கருதுகின்றேன்.

Fr. மைக்கல்: 100 வருடங்களுக்கு மேலாக எமது தலத்திருச்சபையில் பல தாக்கங்களை ஏற்படுத்திய திருக்குடும்ப சபையின் ஒரு மூத்த அருட்சகோதரி என்னும் வகையில் உங்கள் கருத்து என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Sr. வேர்ஜினி :** 3ம் மில்லேனியத்தை நோக்கிய இக்காலத்தில் எமது சபை பல விழிப்புணர்வுகளை எமக்குத் தருகின்றது. துறவியரும், பொது நிலையினரும் இணைந்துபோக வேண்டியவர்களாகவுள்ளனர். அதிகார தோரணையை மறந்து ஒரு குடும்ப உணர்வில் பொது நிலையினரோடு சேர்ந்து பணிசெய்யவே அழைக்கப்படுகின்றோம்.

**Fr. மைக்கல்:** குடும்ப உணர்வை தெளிவாக்க எத்தகைய வழிகளை முன்வைக்கலாம்?

**Bro. ஜெயசீலன் :** இன்னும் பின்தங்கிய நிலையிலேயேயுள்ளோம். பொது நிலையினர் தமது பொறுப்புக்களையும், கடமைகளையும் உணராத நிலையிலும், குருக்கள் அதிகாரம் என்று நிற்கின்ற நிலையில் இருந்தும் சில விட்டுக்கொடுப்புக்களும், புரிந்துணர்வுகளும் இடம்பெறல் வேண்டும். இயேசுவின் மனநிலையில் தோய்ந்து நாம் பணிசெய்ய வேண்டும். அதிகாரம் என்னும் நிலையில் இருந்து விட்டுவிலகிவிட முடியாது. ஒரு செயலை செய்து முடிக்க அதிகாரம் தேவைப்படுகின்றது. ஆனால் அதைப் பயன்படுத்தும் தன்மை முக்கியமானது. ஆயர்களும், குருக்களும் பொது நிலையினருக்கு சில பணிகளைக் கொடுக்கின்ற போது தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒரு நல்ல நிலைக்கு கொண்டுவரலாம் என எண்ணுகின்றேன்.

**Fr. மைக்கல்:** அதிகாரத்தை பயன்படுத்துவது பற்றி...

**Fr. ரவி:** பொதுநிலையினருக்கு திருநிலையினர் பணிகொடுப்பது என்ற மனநிலை அடிப்படையில் தவறு என எண்ணுகின்றேன். பொது நிலையினருக்கும் அழைப்புண்டு. 'திருச்சபையில் அதிகாரம்' என்ற கருத்தை முழுமையாக நிராகரிக்க வேண்டும். ஏனெனில், திருச்சபையில் ஊழியரேயன்றி அதிகாரிகள் இல்லையென்றும்; உலகத்திலுள்ளோர் மற்றோர் மேல் அதிகாரம் செலுத்துகின்றனர், நீங்களோ அப்படியிருக்கக்கூடாது என்று யேசு கூறுகின்றார். எனவே பணி அல்லது ஊழியமே முனைப்புப் பெற வேண்டும்.

**Fr. மைக்கல் :** ஆசிரியரே உங்கள் கருத்து என்ன?

**சௌந்தரம் :** இதையே நானும் ஏற்றுக்கொள்கின்றேன். பணிவிடை பெறுவதற்கன்று பணிவிடை புரியவே வந்தேன் என்றார் இயேசு. திருச்சபையில் குடும்ப உணர்வும் ஐக்கியமும் இடம்பெற வேண்டும். குடும்பத்தலைவன் ஒரு தலைவனாகவும் அதேவேளை பணியாளனாகவும் இருக்கின்றான். எனவே அப்படியானதொரு பணிவிடை, அப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டியான ஊழியம் திருச்சபைக் குடும்பத்தில் இடம்பெற வேண்டும். அதிகாரம் நீக்கப்பட்டு குடும்ப உணர்வு ஏற்பட வேண்டுமென நான் எண்ணுகின்றேன்.

**Fr. மைக்கல்** : யாழ்த்திருச்சபையில் அதிகாரப்போக்கை களைவது பற்றி...

**ரங்கன்** : இயேசு கிறிஸ்துவின் முப்பணியில் அனைவருக்கும் பங்குண்டு. யார் யாருக்கு பணியைக் கொடுப்பது என்பது முக்கியமல்ல. நிச்சயமாக திருநிலையினர் தம்மைத் தாழ்த்திய வகையிலேயே பணி செய்ய முடியும். உதாரணமாக தலை தலைகீழாக நின்றால் உறுப்புக்கள் எப்படி இருக்கும், குருக்களின் வழிகாட்டல் மக்களுக்கு இல்லையென்றால், குருக்களின் சாட்சிய வாழ்வு முரணாக இருக்குமானால் மக்களிடம் மனமாற்றத்தையோ, நல் வாழ்வு முறையோ, எதிர்பார்க்க முடியாது. கிறிஸ்துவின் வழியில், அப்போஸ்தலரின் பாணியில் குருக்கள் தமது வாழ்வை வாழ்ந்து கொண்டே மக்களிடம் ஒரு நல்ல வாழ்வை எதிர்பார்க்க வேண்டும். தனது வாழ்வை மக்கள் பின்பற்றக் கூடிய வகையில் அவர் சாட்சியவாழ்வு வாழ வேண்டும்.

**Fr. மைக்கல்** : அதிகாரம் பற்றி உங்கள் கருத்து என்ன?

**சுனிதா:** அதிகாரத்தைப் பொறுத்தமட்டில் இவர்களது கருத்தையே நானும் ஆதரிக்கின்றேன். 2ம் வத்திக்கான் சங்கத்தின் முன் திரு ஆட்சி முறை பிரமிட்டு அமைப்பில்தான் இருந்தது என அறிகின்றோம். 2ம் வத் சங்கத்தின் தெளிவான நோக்கிலே எல்லோரும் ஒரே நிலையில்தான் உள்ளனர் எனப் பார்க்கின்றோம். ஆனால் இப்போதும் 2ம் வத் சங்கத்தின் முன்னிருந்த நிலையேயுள்ளது. எல்லோருக்கும் ஒரே பணி என்னும் நிலை மேலோங்க வேண்டும். இதுவே 3ம் மிலேனியத்தில் நாம் முன்னெடுக்கும் நல் முயற்சியாக அமையும். முப்பெரும் பணியிலும் பொது நிலையினர் பங்கெடுக்க தலைமைத்துவம் வழிவகுக்க வேண்டும். அத்தோடு பொதுநிலையினரின் கருத்துக்களையும் திருநிலையினர் அவசியமாக செவிமடுக்க வேண்டும். எல்லோரும் ஒன்று சேர்ந்து செயற்பட வேண்டும் என்பதே எனது ஆவல்.

**Fr. மைக்கல்** : இக்கருத்துப்பற்றி ...

**Bro. ஜெயசீலன்:** திருநிலையினருக்கென்று சிலவும், பொதுநிலையினருக்கென்று சிலவும் உள்ளன. எனவே அப்பணிகளை இனங்கண்டு அவற்றை நிறைவு செய்தல் வேண்டும் என எண்ணுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Fr.** மைக்கல் : மக்களின் கருத்துக்களுக்கு செவிமடுப்பதில்லை என்பதுபற்றி ..

சௌந்தரம் : நிகழ்காலத்தில் இதை நான் ஏற்கவில்லை. மக்களுக்கு சுதந்திரம் சற்று உள்ளது எனக்கருதுகின்றேன்.

**Fr.** மைக்கல் : அதிகாரம் பற்றி உங்கள் கருத்து என்ன?

**Sr..** வேர்ஜினி : அதிகாரம் எமது மனங்களில் இறுக்கமாகப் போடப்பட்டுள்ளதை காணக்கூடியதாக உள்ளது பணியைப்பற்றி நாம் பேசும் போது திருச்சபையானது ஒரு விசுவாசக் குடும்பமாகவேயுள்ளது ஒரு குடும்பத்தில் தந்தை நெறிப்படுத்துபவராகவுள்ளார் இருப்பினும் தாய் பிள்ளைகளுக்கும் பல பணிகள் இருக்கின்றன. உலகக் குடும்பங்களில் பிள்ளைகளை இன்று நெறிப்படுத்த முடியாத நிலையைக்காணக் கூடியதாகவுள்ளது. திருச்சபையில் அதிகாரத்தைக் களைந்துவிடும் போது ஐக்கியத்தை ஏற்படுத்தி வாழமுடியும். நெறிப்படுத்துதல் இருக்கும்போது திருச்சபை இன்னும் வளம் பெறும். அதிகாரப்போக்குகளையப்படாதவிடத்து 3ம் மில்லேனியத்தில் திருச்சபை இப்போது உள்ளது போலவே இருக்கும் என எண்ணுகின்றேன்.

**Fr.** மைக்கல் : குருவானவர் தன்வாழ்வில் முரண்சாட்சியாக இருப்பதாக கூறினீர். இது யாழ் திருச்சபையை பொறுத்தமட்டில் ஒட்டு மொத்தமாக எவ்வாறு இருக்கும்?

ரங்கன் : பாதிக்கு பாதி என்றே கூறவேண்டும். முரண்சாட்சியான வாழ்வை இன்று குருக்கள் வாழ்வதை நாம் காணக்கூடியதாகவுள்ளது. அதேவேளை நல்ல சாட்சிகளாகவும் சிலர் வாழ்கின்றனர். நான் வலியுறுத்துவது என்னவென்றால், இன்றைய நிலையைப் பொறுத்தவரை குருக்களே திருச்சபையின் போதனையை மக்களுக்கு வழங்குகின்றனர். இவ்வாறு மக்களுக்கு போதிக்கும் அவர்கள் கிறிஸ்தவ விழுமியங்களின்படி வாழாது இருக்கும்போது, அவற்றை வாழும்படி மக்களுக்கு எடுத்துக்கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகவே இருக்கும். ஒரு சிலரது முரண்பட்ட வாழ்க்கையினால் பிறமத சகோதரர்கள் குருக்கள் அனைவரையும் குறை சொல்வதைக் காணக்கூடிதாகவுள்ளது. திருச்சபையின் எதிர்காலம் நன்றாக அமையவேண்டுமானால் முரண்பட்ட வாழ்க்கை வாழும் குருக்கள் தமது வாழ்வை மாற்றிக்கொள்வது அவசியமாகவே இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Fr. மைக்கல்:** பொதுநிலையினர் முரண் சாட்சிய வாழ்வு வாழ்வது பற்றி...

**சுனிதா :** எமது சமூக ஏற்றத் தாழ்வுகள் நாம் முரண்சாட்சிகளாக வாழ்வதை எடுத்துக் காட்டுகின்றது. எல்லோரும் சமம் என்ற தன்மை அற்ற நிலையையும், அதிகாரத்தை அண்டிய வாழ்வை மக்கள் வாழ்வதையும் காணக்கூடியதாகவுள்ளது. கடந்த A/L பரீட்சை விடைத்தாள்களில் மத்தேயு நற்செய்தியை அடிப்படையாகக் கொண்ட கிறிஸ்தவ விழுமியங்களை கிறிஸ்தவர் வாழவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் நாளாந்த வாழ்க்கையில் கத்தோலிக்க கிறிஸ்தவர்களுக்கும் பிறமத சகோதரர்களுக்குமிடையில் வித்தியாசம் காணப்படவில்லை என்றே கூறவேண்டும்.

**Fr. மைக்கல்:** பொதுநிலையினரின் இந்நிலைக்கான காரணம்பற்றி...

**Sr. வேர்ஜினி:** மக்கள் மத்தியில் பக்தி உண்டு. ஆனால் விசுவாசம் இல்லை. விசுவாசமற்ற நிலையே காரணமாக அமையலாம என எண்ணுகின்றேன்,

**Fr. மைக்கல் :** உங்கள் கருத்து என்ன?

**சௌந்தரம் :** பின்பற்றல் முறையை நாம் பெரிதும் கைக்கொண்டே வாழ்கின்றோம். பொதுநிலையினருக்கான வேத அறிவு போதாது உள்ளது. வேத அறிவு வழங்கல் ஒரு கட்டாயத்தேவையாகவுள்ளது. பொதுநிலையினர் வேத அறிவைப்பெறும் வாய்ப்புகளை ஏராளமாக நாம் ஏற்படுத்த வேண்டும் என கருதுகின்றேன்.

**Fr மைக்கல் :** சமூக ஏற்றத் தாழ்வுகள் இன்று கிறிஸ்தவர் மட்டில் மலிந்து இருக்கின்றது என ஆசிரியை கூறினார். இதற்கான காரணிகள் என்ன?

**ரங்கன் :** முக்கியமாக இன்று சமூக, பொருளாதார, அரசியல் காரணிகள் முன்னிடம் வகிக்கின்றன. மக்கள் தமது அன்றாட பிரச்சனைகளுக்கு விடைகாண முடியாதவராகவுள்ளனர். அரசியல் பிரச்சனை அதிகளவில் மக்களைப் பாதித்துள்ளது. எந்தவொரு செயற்பாட்டையும் திருச்சபை இன்று தொடர்ந்து செய்யாத நிலையை நாம் காணுகின்றோம். இவ்வாறு தொடர்ந்து செய்யாத போது வழிநடத்தல் இல்லாது போய்விடும். உதாரணமாக பொதுநிலையினருக்கான இறையியல் கல்லூரி இருதடவை தொடங்கப்பட்டு பின் நிறுத்தப்பட்டுவிட்டது. இவ்வாறான சூழ்நிலையில் இறையியல் கருத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை மக்களுக்கு கொடுப்பது அவசியமாகவுள்ளது. இன்று பெண்காள அதிகளவில் கல்விகற்கும் நிலையைக் காணக்கூடியதாகவுள்ளது. சமூகத்தின் வளர்ச்சிக்கு பெண்களின் பங்களிப்பு அவசியம் தேவையாகவுள்ளது.

**Fr. மைக்கல்:** இது பற்றி உங்கள் கருத்து என்ன?

**Fr. ரவி:** சாட்சிய வாழ்வு முக்கியமாகவுள்ளது. திருநிலையினரும் பொது நிலையினரும் இணைந்து இக்காலத்தில் ஓர் ஆழமான தேடலுக்குள் இறங்கவேண்டியது அவசியம். பொதுநிலையினரின் சாட்சிய வாழ்வின் அவசியத்தை சுட்டிக்காட்ட குருக்களுக்கு பல சந்தர்ப்பங்கள் உள்ளன, ஒவ்வொரு ஞாயிறு மறையுரையிலும் இதுபற்றி முழங்கலாம். இதுபோல குருக்களின் சாட்சியவாழ்வு பற்றி பொதுநிலையினர் சுட்டிக்காட்ட போதிய தளங்கள் இல்லை என்றே கூற முடியும். இதையாருடன் சொல்வதென்று தெரியாமல் பலர் ஆதங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். எனவே எல்லா நிலைகளிலும் கலந்துரையாடலுக்கு சந்தர்ப்பங்கள் அதிகரிக்கப்படவேண்டும். திருநிலையினர் பொதுநிலையினரின் கருத்துக்களைக்கேட்டு திருந்தி நடக்கின்ற பயணமே ஒரு சந்தோசமான பயணமாக இருக்கும். எமது நாளாந்த வாழ்க்கைப் பிரச்சனைகளும், குறிப்பாக இப்போரும், அதனது பிரச்சனைகளும், துன்பங்களும் எமது வாழ்வை அதிகம் பாதித்துள்ளன. இதனை எவ்வாறு நாம் இறையியலாக்கலாம் எனவும், அதன் வழியாக எப்படி ஒரு இறையரசுச் சமூகமாக வாழலாம், விழித்தெழலாம் என்ற ஆழமான இறையியல் தேடல் ஒரு வெற்றிடமாகவேயுள்ளதென எண்ணுகின்றேன். காலத்தின் சூழ்நிலைக்கேற்ப நாம் அர்ப்பண ரீதியான, உணர்வு ரீதியான பதிலை நாம் இன்னும் முன்வைக்கவில்லை என்றுதான் கூறமுடியும். பொதுநிலையினருடன் கூடிய ஈடுபாட்டில் தான் திருநிலையினர் இதைச்செய்யமுடியும். அப்போது தான் திருநிலையினர் பொதுநிலையினரது வாழ்விலும், பொதுநிலையினர் திருநிலையினரது வாழ்விலும் இறங்கடிடியும் என எண்ணுகின்றேன்.

**Fr மைக்கல்:** போரின் தாக்கம் கத்தோலிக்கரை எவ்வாறு பாதித்துள்ளது?

**சௌந்தரம் :** எருமை மாட்டில் மழைபெய்தது போலத்தான் இருக்கின்றோம். குருக்கள் இதுபற்றி அடிக்கடி விழிப்புணர்வூட்ட வேண்டும். மடுக்கோவில் தாக்கப்பட்ட பின் எமது பெரியகோவிலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடாத்தப்பட்ட கண்டனப் பிரார்த்தனையில் பலர் பங்குபற்றியதைக் காண்கின்றோம். இதற்குக் காரணம் விழிப்பூட்டலேயாகும். எனவே மக்களை நல்லமுறையில் விழிப்பூட்ட வேண்டும் என நினைக்கின்றேன்.

**Fr.** மைக்கல்: வழிபாடுகளில் போரின் தாக்கம் எவ்வாறு உள்ளது?

**Sr.** வேர்ஜினி : மக்கள் மத்தியில் இன்று அமைதியைத்தேடும் மனநிலையைக் காணக்கூடியதாகவுள்ளது. இதை வழிபாடுகள் மூலம் விழிப்புணர்வுகள் ஏற்படுத்தவேண்டும். புதுப்பித்தல் எல்லா நிலைகளிலும் இடம்பெறல் வேண்டும் எமது இந்த யாத்திரைப் பயணத்தில் சோர்வு இல்லாத நிலைவேண்டும் எமது வழிபாடுகளை அமைதி, அன்பு என்பவற்றுக்கு ஏற்ப மாற்றி அமைக்க வேண்டும்

**Fr.** மைக்கல்: ஏழைகள் பற்றிப் பேசினீர்கள். வழிபாட்டில் அவர்களது நிலைபற்றி யாது கூற விளைகின்றீர்கள்?

சுனிதா : ஆலய திருநாள் கொண்டாட்டங்கள் ஆடம்பரமாகவேயுள்ளது. இது நிச்சயமாக ஏழைமக்களுக்கு ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும். எளிமை, ஏழ்மை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு எமது ஆடை அலங்காரங்கள் அமையும்போது ஏழைகளும் அர்த்தமுள்ள விதத்தில் பங்கெடுப்பர். ஒருசில ஆலயங்களில், நத்தார் விழாப் பூசைக்கு வெள்ளைநிற ஆடைகள் அணியவேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. ஆனால் அதற்கான சரியான விளக்கங்கள் கொடுக்கப்படவில்லை. இதனால் சில மயக்க நிலைகள் மக்கள் மத்தியில் காணப்படுகின்றது. விளக்கங்கள் அதிகமாகக் கொடுத்து மக்களுக்கு விழிப்புணர்வூட்டச் செய்தல் நல்ல பலனைத் தரும் என எண்ணுகின்றேன்.

---

**Fr.** மைக்கல்: இக்கலந்தாய்வரங்கு பற்றி ''இறையியல் கோலங்களின்'' தலைமை ஆசிரியராக பணியாற்றும் அருட்பணி. ஜே. நீக்கலஸ் அடிகளார் தனது குறிப்பைக் கூறுவார்.

**Fr.** நிக்கிலஸ் : இது நன்றாக அமைந்து இருந்தது. ஆழமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அனுபவம் நிறைந்த மன எழுச்சிகளை இவர்கள் வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். இறையழைப்பில் திருநிலையினரும், பொதுநிலையினரும் சேர்ந்து ஒரே விதத்தில் செயற்பட வேண்டும். காலத்திற்கும், சூழ்நிலைக்கும் ஏற்ப எமது வாழ்வு மாற்றி அமைக்கப்படுதல் அவசியமானது. இது 3-ம் மில்லேனியத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியமாகவுள்ளது. 'பொதுநிலையினர்' 'திருநிலையினர்' என்னும் சொற்பதங்கள் இன்னும் பிரிவினையையே ஏற்படுத்தும் என எண்ணு கின்றேன். இது தவிர்க்கப்படுதல் நல்லது எனக் கருதுகின்றேன்.

**Fr.** மைக்கல்: இக்கலந்தாய்வரங்கின் தொகுப்புரை ஒன்றை வழங்குமாறு இணை ஆசிரியர் அருட்பணி மங்களராஜாவை அழைக்கின்றேன்.

**Fr.** மங்களராஜ்: 3-ம் மில்லேனியத்தில் திருச்சபையின் வாழ்வும் பணியும் பற்றிப் பல்வேறு பயனுள்ள கருத்துக்கள் நம் சிந்தனைக்கும் செயல்பாட்டுக்குமாக முன்வைக்கப்பட்டுள்ளன. திருச்சபையின் வாழ்விலும் பணியிலும் திருநிலையினருக்கும் பொதுநிலையினருக்கும் ஒரு கூட்டுப்பொறுப்பு உண்டு. பொது நிலையினரை எல்லாப் பணிகளிலும் ஈடுபடுத்தக்கூடியதான ஒரு சூழ்நிலை ஏற்படுத்தப்படவேண்டும். இதற்காக யாழ் திருச்சபையைப் பொறுத்தமட்டில் பொது நிலையினரையும் இப்பணியில் ஈடுபடுத்த அவர்களைத் தயாரிக்கும் முகமாக சில நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். உ+ம். சில வருடங்களுக்குமுன் ஆரம்பிக்கப்பட்டு இடையில் நின்றுபோன (தவிர்க்க முடியாத காரணங்களால்) பொதுநிலையினர் இறையியல் கல்லூரி திரும்பவும் இயங்க வைக்கப்படவேண்டும். அவ்வப்போது வெளியாகும் திருத்தந்தையின் சுற்றுமடல்கள், அறிவுறுத்தல்கள் போன்றவை தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு பொது நிலையினருக்கும் அவை கிடைக்கும்படி செய்யவேண்டும். பொது நிலையினர் முதிர்ச்சியில் திருநிலையினரின் சாட்சிய வாழ்வும் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஒட்டு மொத்தமாகப் பார்க்குமிடத்து திருச்சபையில் பொது நிலையினர் திருநிலையினரிடையே புரிந்துணர்வும் கூட்டுச் செயல்பாடும் இருக்க வேண்டும்.

★ ★ ★

**இக்கலந்தாய்வரங்கு பற்றிய உங்கள் விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.**

மாபெரும் யூபிலி ஆண்டில் — நாம்
மனம் மகிழ்ந்தே வாழ்வோம்.
உயர்வுகள் தாழ்வுகள் இன்றி - நாம்
உடன் பிறந்தோராய் வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SYNOPSIS

## Eucharist - the Source and Summit of our lives

**Fr. P. J. Jebaratnam**

Eucharist is the sign that in a sense completes all the other sacraments. Instituted as it was by Christ, the Eucharist has never ceased to be what it was in the beginning. The accounts of the institution of the Eucharist is found in all the three synoptic gospels and in St. Paul's First letter to the Corinthians. Despite the duality of traditions, the same structure marks all the accounts, and the same sequence of structure determines the course of the second part of the Mass – the liturgy of the Eucharist. Christians have told the eucharistic story, enshrined within the liturgy, in the Church's response to the command of Jesus: 'Do this in memory of me'. However, this story has not been told only in the liturgy; it has been told just as significantly in the lives of the Christians who have been prepared to break their own bodies and spill their own blood in a deeply eucharistic way, proclaiming 'the Lord's death until he comes' (1 Cor. 11:26). Thus, the Eucharist becomes meaningful.

## The Incarnation and the Liberation of the Poor

**Bro. S. A. Arudchelvan**

Poverty is one of the worst evils of humanity which has to be eradicated from the face of the earth. Since the state of poverty affects one's own spirituality and consequently the salvific goal of man, the Church has to play a big role in this matter. As Jesus entered human history and touched the lowly in order to raise them up so also we the Church



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the followers of Christ, are expected to participate in the sufferings of others in order to give meaning to the incarnation of Christ.

In the Old Testament and in the New Testament, we have proofs for this mission. God Himself takes the side of the weak and redeems them from the clutches of the landowners and the wealthy people through prophets. As we look into the N T, Jesus becomes the Saviour of the weak and the insignificant and proclaims the good news that the Kingdom of God is theirs.

Coming to the Church, the mystical body of Christ, it has the same ministry to carry out, specially the Jaffna Church, amidst the present critical situation, which produces thousands of poor has to dedicate herself to the upliftment of their lives. This mission does not come from somewhere else, but from the very INCARNATION of Christ, Jesus.

# Let us bring back Jesus to the Soil of Asia

**Rev. Fr. J. Nicholas**

It is a fact that Christianity is considered in Asia as an imported religion from Europe. Thus Jesus is looked upon as a stranger in our own soil. Hence the urgency of incultur-ation is to be taken seriously The second Vatican council gave a broader vision about respecting and accepting the cultural traditions of various peoples. However the process of inculturation is not geared in the right direction. Jesus needs to be presented through the gospels. It is an incumbent duty of ours to preach the gospel according to the command of Christ. Dialogue with the non - Christian religions cannot be a hinderance to preach the good news. As Pope John Paul II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

said we cannot procalim the good news without Jesus Christ. During his last visit to India he stated that Asia needs Christ. We can present Christ through the cultures of Asia. Our rich cultural traditions are often ignored chiefly because of Westernization. The cultural expressions are needed in our Theology, Liturgy, Catechetics, spirituality and in our preaching the Good News. The true image of Christ must be restored in Asia through the cultures of the soil.

# Jesus, the Evangelizer

**Bro. Silvester O. M. I.**

Jesus' evangelization embraces both the poor and the rich, both the oppressed and the oppressor. His evangelization is one of breaking down walls of hostility of crossing boundaries between individuals and groups.

The passage from LK 4. 16—30 which contains two citations from the prophet Isaiah (61. 1-2, 58 2) is usually interpreted as the foundation of Jesus' evangelization. His action is directed to evangelizing the poor to freeing prisoners, to bringing liberty to the oppressed.

The text from Isaiah 61. 1—2 goes on "and the day of vindication by our God" — significantly that is not included in Luke what is included in Jesus' programme, his life's project. He is going to proclaim the acceptance year, the jubilee year of the Lord's favour. The text (LK 4. 16—30) stands as a "preface" is Jesus' entire ministry.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக மீட்பர் இயேசு பிறப்பின்

2000 ஆம்

மாபெரும் யூபிலி ஆண்டிலே

உங்கள் அனைவருக்கும்

இறையருள் நிறைந்த

கிறிஸ்மஸ் புத்தாண்டு

வாழ்த்துக்கள்.

அட்டைப்படம்:- அருட்சகோ. தா. நிருபன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் கோலங்கள்

ஆண்டு சந்தா (அஞ்சல் செலவு உட்பட) ரூபா 80/=

தனிப்பிரதி ரூபா 25/=

*தொடர்பு கொள்க:*

"இறையியல் கோலங்கள்"

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்,
இலங்கை.

தொலைபேசி 021-2482

## Irai-Iyal Kolangal

A Tamil Theological Quarterly
Annual subscription (incl. Postage within Sri Lanka) : Rs. 80/=
Single Copy – Rs. 25/=

Subscription and correspondence to :

## Irai-Iyal Kolangal

St. Francis Xavier's Seminary,
Columbuthurai,
Jaffna,
Sri Lanka.

Tel. No. 021 – 2482

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புனித வளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம் - 1999